

Le Cid

de

Corneille





கொர்னேய் அவர்களின்

லெ-ஸீத்

தமிழ் வடிவம்: திரு. ஆந்திரே மரி புதுவை.

பிரபல பிரெஞ்சு எழுத்தாளர்

கொர்னேய்

தீட்டிய

"லெ ஸீத்"

LECID

என்ற நாடகத்தைத் தழுவியது.

முதற்பதிப்பு:- 1958
இரண்டாம் பதிப்பு:- 1983

ஸ்ரீதரன் பிரிண்டர், புதுவை.

முன்னுரை

கலைகளுக்கு அரசு நாடகக் கலையாகும். அதில் நவரசக் காட்சிகளும் கிளர்ச்சிகொண்டெழுந்து வாழ்விற்குப் பயனளிக்கும். வாழ்வில் எல்லையற்ற குணதொந்த விகாரங்களை ஒரு மேடையில் விறுவிறுப்பாக விளக்குவது நாடகம். நாடகத்தில் கவிதை, பாட்டு, வசனம், ஓவியம், சிற்பம், நடனம் - எல்லாம் ஒருங்கே கூடிக்குழைகின்றன. நாட்டின் பெருமை நாடகப் பெருமையே. ஒவ்வொரு நாடும் நாடகக் கலையை நன்கு வளர்க்கிறது. எனது ஐரோப்பிய யாத்திரையில் பல ஆபராக்களையும், நாடகங்களையும் கண்டு மகிழ்ந்தேன். திரைப்படத்தைவிட மேடைக்கே அங்கே மதிப்பு அதிகம். கூட்டம் அதிகம், இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, ரஷ்யா முதலிய நாடுகளின் மேடைச் செல்வத்தை நுகர்ந்து பாரீஸ் நகருக்கு வந்தால்... அடடா ! அழகுச்செல்வம் அரங்கில் மின்னிப் பொலிகிறது.

பிரெஞ்சு மொழி இனிய தீஞ்சுவையமுதம் போன்றது அதில் உள்ள கலைச்செல்வம் வேறெந்த மொழியிலும் இல்லை எனலாம். அதிலும் நாடகக் கலை விளக்கத்தில் பிரெஞ்சு மொழி ஒப்புயர்வற்ற அற்புதமாக விளங்குகிறது.

மொலியர், ராஸீன், கொர்நேய், விக்தர் ஹ்யூகோ - ஆகிய பெரும்புலவர் நாடகங்கள் அமரத்தன்மை பெற்றவை. அவை செய்யுள் நடையின அவற்றைப்போல வேறெந்த மொழியிலும் நாடகங்கள் இல்லை எனலாம் (ஆங்கிலம் தவிர). கொர்நெய் பெரும்புலவன், கலைச் செல்வன், வித்தகன், தெய்வபக்தன், அவன் ரோம கிரேக்கக் கதைகளை ஆவேச நடையில் நாடகமாக்கினான் அவற்றுள் CID, ஸீத் என்னும் நாடகம் மிகச் சிறந்தது; வீர விறுவிறுப்பும், காதலின் கவர்ச்சியும் நிரம்பியது. இந்த நாடகத்தைத் தமிழாக்கிய ஸ்ரீ ஆந்திரே மரீ இரு மொழியறிஞர். மொழி பெயர்ப்பில் உணர்ச்சியுள்ளது; உயிர் உள்ளது. இந் நாடகத்தைப் பல மேடைகளில் நடிக்கவேண்டும்.

புதுவையில் புதுவை கலா மன்றம் நாட்டி இளந் திருமணிகள் சேர்ந்து நாடகக் கலையை வளர்க்கவேண்டும். என் பேனாமுனையில் மலரும் நாடகங்களை அவர்களுக்குத் தந்துதவத் தயாராயிருக்கிறேன்.

யோக சமாஜம்,
வடலூர் சென்னை
17—8—58

சுத்தானந்த பாரதி
(கையொப்பம்)

SRU UNE ADAPTATION DU CID EN TAMOUL PAR ANDRE MARIE DE MADAME YVONNE R. GAEBELE

.........Dans la pièce française. Chimène et sa suivante sont tout d'abord en scène et longuement Chimène avoue son amour pour Rodrigue: dans la scène suivante, c'est le tour de l'Infante d'avouer à sa confidente son amour pour le même. Donc pendant 150 vers exactement nous avons une idée de ce que va être la pièce. Ce qui fait passer la longueur de cette entrée en matiére, c'est que ces 150 vers sont des vers de Corneille ! ... Mais si l'adaptation en tamoul avait suivi de près le mot à mot, cela aurait été mortel et M. ANDRE l'a bien compris en supprimant tout à fait ces premières scènes.

Nous entrons brusquement dans le vif du sujet car le rideau se lève sur un jardin ravissant où Chimène et Rodrigue se sont donnés rendez-vours C'est un duo d'amour d'une grande sensibilité mais d'une retennue charmante.

.........La pièce de Corneille se termine per le pardon du Roi et sa demande aux amants d'attendre:

"Laisse faire le temps, ta vaillance et ton Roi"

Mais voilà, ce qui satisfait des coeurs et des esprits du XVIIe siècle ne saurait satisfaire le siècle oû nous sommes et M. ANDRE l'a bien compris............

Les promesses du Roi aussi douces qu'elles soient laissent le spectateur décu et ils l'etalent méme à l'époque, nous disent les critiques ! Donc impossible maintenant, et surtout pour des spectateurs indous, une fin semblable.........

Signé Yvonne R. Gaebelé

PURITY UNITY DIVINITY

Yogi Samaj (Regd.)
Sri Ram Nagar,
Adayar, Madras-20.

Founder President
Kaviyogi Maharshi
SHUDDHANANDABHARATHI
7-11-59

Mon cher André,

C'est très bien que vous avez si bien traduit votre pièce intitulée " VETTRY VIRAN "! A vous mes félicitations' Courage En avant Soldat-Acteur- Ecrivain.

Signé
Yogi Suddhanandabharathi

" செந்தமிழ்த் தொண்டர் "
தமிழ் மாமணி,
" சிவநெறிச் செல்வர் "
சிவ. கண்ணப்பா

" இளங்கோ இல்லம் "
38, ஈசுவரன் கோவில் தெரு,
புதுச்சேரி - 605001.

என் வாழ்த்து !

"லெ ஸீத்" ஒரு பிரஞ்சு நாடகம், கற்றவர் போற்றும் ஒரு கலைப் பொக்கிஷம் இதனைப் பிரஞ்சு மொழியில் கவிதை வடிவில் வடித்துத் தந்தவர் புகழ்மிக்க "கொர்னேய்" என்ற கவிஞர். பிரஞ்சு நாட்டு மக்களால் பெரிதும் ரசிக்கப் பட்ட நாடகம்.

"வெற்றி வீரன்" என்ற தலைப்பில் தமிழாக்கம் செய்து தாமே முதன் முதல் கதாநாயகனாக மேடையில்தோன்றி நடித்ததோடு இயக்கவும் செய்தார். "திரு ஆந்திரேமரி" அவர்கள். இதுவரை 24 முறை இந்நாடகம் காரைக்கால், புதுச்சேரி, சென்னை, மதுரை, பெங்களூர் முதலிய இடங் களில் நடைபெற்றுள்ளது. சென்னை பொருட்காட்சியில் முதற் பரிசும் பெற்றுள்ளது. வெள்ளம் போல் மக்கள் திரண்டு வந்ததால் பெங்களூரில் தொடர்ந்து மூன்று நாள் நடை பெற்றது.

இன்று "லெஸீத்" என்ற மூலப் பெயருடன் 25-வது நாடகமாக வெள்ளிவிழாக் கோலம் பூணுவது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன் இவருடைய நாடகம் கலை நோக்குடனேயே இன்றுவரை நடைபெற்று வந்துள்ளது. இதன் மூலம் வரும் நிதி அனைத்தும ஏதேனும் ஒரு சங்கத் துக்கே உரியதாக்கினார். திரு. ஆந்திரே மரி அவர்கள். இந்த உயந்த மணத்துக்காக மக்கள் அவருக்கு,

"அருங்கலைவாணர்" "நாடகக் காவலர்" என்ற பட்டத்தைச் சூட்டிப் பெருமைபடுத்தினர்.

புதுவைப் புகழ்மணி ஆந்திரே மரி வாழ்க என்று நானும் வாழ்த்துகிறேன்.

- ஒப்பம் -
சிவ. கண்ணப்பா.

— என்னுரை —

பிரபல பிரஞ்சு புலவர்கள் கொர்னேய் அவர்களின் Le Cid மொலியேர் அவர்களின் le Medecin Malgré-lui ஆகிய காவியங்களைத் தமிழாக்கம் செய்ததோடு - சில கற்பனைக் கதைகளையும் - நாடகங்களாக அமைத்தேன்.

'' ஜெயவதி '' அல்லது '' காதலின் வெற்றி '' ''கமலாகரியின் காதல் '' '' வெற்றி வீரன் '', '' கட்டாய வைத்தியன் '' என்ற என் படைப்புக்களில் நானே முக்கிய பாகமும் ஏற்று நடித்துள்ளேன்.

கதைகளை எழுதவும், அவைகளில் நடிக்கவும் ஊக்கமும் நல்லாசியும் நல்கிய எனது வீட்டுப்பாட ஆசிரியர் ''சந்தனசாமி சவரி'' அவர்களுக்கும், பின்னர் எனக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டிய ''தவத்திரு சுத்தானந்த பாரதியார்'' அவர்கட்கும், பேராதரவு தந்த ''மதாம் கெப்ளே'' அவர்களுக்கும், பாராட்டுக்கள் வழங்கிய காரைக்கால் நிர்வாகி டாக்டர் பக்மான், புதுவை கவர்னர் ஆந்த்ரே மெனுர், இராணுவ போலீஸ் அதிகாரி கப்பித்தேன் புகார், பிரஞ்சு தூதுவர் மோரேல் பிரான்க்கோஸ், நீதிபதி அபேல் குளோவிஸ், கோபாலகிருஷ்ணன், சிவ. கண்ணப்பா முதலியோருக்கும் எனது உள்ளங்கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

என்னுடைய நாடகங்களில் என்னுடன் பங்கேற்று நடித்த நண்பர்களுக்கும் நடிகைகளுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

கடந்த இரண்டாவது உலக போரின்போது தோன்றிய செஞ்சிலுவை சங்க நிதிக்காக உதவ முன்வரவேண்டுமாய், அவ்வமயம் காரைக்கால் நிர்வாகியாய் இருந்தவரின் கோரிக்கைப்படி 14—7—42-ல் ''ஜெயவதி'' அல்லது ''காதலின் வெற்றி'' என்ற நாடகத்தை தயார் செய்து எனது சிப்பாய் நண்பர்களோடு – காரைக்கால் ''அருள் எலெட்ரிக் தியேட்டரில் அரங்கேற்றினேன்.''

11—11—43-ல் '' வெற்றி வீரன் '' என்ற லெஸீத் நாடகத்திலும் - 1944 ல் ''கமலாகரியின் காதல்'' என்ற சமூக நாடகத்திலும் 1945-ல் நடத்திய Le Medecin Malgré lui என்ற கட்டாய வைத்தியன் நாடகத்திலும் - 1949-ல் மறுமுறை

யாக நடத்திய Le Cid "வெற்றி வீரன்" நாடகத்திலும் – ஆண்களே, பெண்வேடம் ஏற்று என்னுடன் நடித்தனர் நான் மாஹே சென்றிருந்தபோது Le Medecin Amoureux– 'காமுகனுய டாக்டர்'' என்ற நாடகத்தை தமிழில் — மாஹே (Mahé)யிலும் - பின்பு (Pallour) பல்லூரிலும் நடத்தினேன்.

1952-இல் இராணுவ சேவைக்காக மேனுடு சென்றிருந்த நான் 1956-ல் ஓய்வுபெற்றுப் புதுவை திரும்பியபின் லெ ஸீத் (Le Cid) என்ற நாடகத்தை, நண்பர் R. R. பலராமன் அவர் கள் மூலம் பல நிர்வாகங்கள், சங்கங்கள் முதலியவற்றின் நிதிக்காக நடத்தி, உதவி புரிந்து வந்தேன்.

1943 முதல் 1978 வரை 24 முறை நடத்தப்பெற்ற "Le Cid" லெ ஸீத் நாடகத்திற்கு தலைமை ஏற்ற பல பெரியோர்களுக்கும், பல சமயங்களில் திரையரங்கை உதவிய "நியூட்டோன்" உரிமையாளர் திரு. குழந்தை [illegible]" அவர்களுக்கும், நன்றி செலுத்த கடடைபட்டுள்ளேன்.

Le Cid லெ ஸீத் நாடகம் 26—12—83-இல் "வெள்ளிவிழா" நாடகமாக, புதுவை, "சொசியேத்தே புரோகிரேஸீத்" நடத்தும் பள்ளியின் வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படுவது குறித்து மணமகிழ்கின்றேன். ஆகவே "வெற்றி வீரன்" பெயரில் நான் வெளியிட்ட புத்தகத்திற்கு நல்லாசி நல்கிய "கவியோகி தவத்திரு சுத்தானந்தபாரதியார்" அவர்களுக்கே இந்த இரண்டாவது வெளியீட்டைச் சமர்ப்பிக்கின்றேன்.

கொர்னேய் அவர்களின் அழியாக் காவியமான "Le Cid" லெ ஸீத் நாடகக் கதையை, மாணவ மாணவியர்களும் மற்றவர் களும் படித்து மகிழவேண்டுமென்பதே எனது விருப்பம்.

நன்றி ! வணக்கம் ! !

புதுவை ஆந்திரே மரி

LE CID

"லெ ஸீத்"

கதைச் சுருக்கம்

கேஸ்திய் நகரின் அரசாங்கத்தில் தோன் கொர்மாஸ் ஒரு வீர சேனாதிபதி. அவரின் மகள் ஷிமேனும், சேனாதிபதி பதவியிலிருந்து விலகிய தோன் தியேஃ அவர்களின் குமாரன் ரொத்ரீஃகும் உண்மையுடன் காதலித்து வருகின்றனர்.

அரசனை தோன்ஃபெர்னந் தம் புதல்வனுக்குப் பல வித்தைகள் போதிக்க, தோன் தியேகை நியமிக்கிறார். அப்பதவி தனக்கே கிடைக்குமென்று எண்ணியிருந்த தோன் கொர்மாஸ், கிழவர் தோன் தியேகிடம் வலிய வாதாடி அவரின் கன்னத்தில் அறைந்து விடுகிறான்! அவமானத்தால் மனம்நொந்த தோன் தியேஃ, தம் மைந்தன், தோன் ரொத்ரீகை ஏவி, தனது வஞ்சத்தைத் தீர்க்குமாறு கட்டளையிடுகிறார். தந்தையின் கட்டளையை நிறைவேற்ற, தன் காதலை உதறி, காதலியின் தகப்பனைக் கொன்று போடுகிறான்.

தன் பிதா, தனது காதலன் ரொத்ரீகின் கரங்களால், மாய்க்கப் பட்டார் என்றறிந்த ஷிமேன், காதலைத்தள்ளி ரொதரீகை வெறுக்கிறாள். அரசு சபையில் கொலைஞனைச் சிரச்சேதம் செய்யுமாறு வாதாடுகிறாள். தோன்தியேகோ தம் மைந்தனின் குற்றத்தைத் தனதென்று தெளிவுறுத்தி தன்னையே பலியிட வேண்டுகிறார். ஆனால் ஷிமேன், ரொத்ரீகுக்குத் தண்டனை அளிக்கவேண்டுமென்று கேட்கிறாள். இருந்தாலும், அவள் உள்ளத்தில் மூண்ட அன்பென்னும தீ அணையவில்லை.

ஷிமேன், ரொத்ரீகை வெறுப்பதறிந்த அரசகுமாரி யூராக், தோன்ரொத்ரீகின் மீது காதல் கொள்கிறாள் !

இவ்வமயத்தில் நாட்டில் எதிரிகள் புகவே போர் மூள்கிறது ! படைத்தலைவனாக, தோன்ரொத்ரீகே, நியமிக்கப்படுகிறான் ! !

வெற்றிக்கன்னி அவனை அணைக்கிறாள்; "**LE CID**" என்ற நாமம் சூட்டப்படுகிறான்! ஷிமேனை சாந்தப்படுத்த அரசன் அவளை அழைக்கிறார். அவளோ அவரிடம் நீதியின் முடிவைக் கேட்கிறாள். சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு தோன்சான்ஷ் என்ற ஒரு படை வீரன் ஷிமேனை மணம் முடித்துக்கொள்வதற்காக, ரொத்ரீகுடன் வாள் யுத்தம் செய்வதற்குத் தயாராகிறான். பின் தன் நண்பன் ஒருவனின் யோசனைப்படி ரொத்ரீகின் உடைவாளைப் பெற்றுச்சென்று ஷிமேனிடம் கொடுக்க, அவள் அவனைச் சினந்து தன் காதலனைக் காரணமின்றிக் கொன்றான் என்று அரசரிடம் கதறுகிறாள் உண்மையை அறிந்த அரசர் பிரிந்த காதலர்களை ஒன்று சேர்த்து ஆனந்திக்கிறார். மக்கள் அனைவரும் ஆனந்த கூத்தாடி மகிழ்கின்றனர்.

சுபம்.

LE CID

"லெ ஸீத்"

நாடகப் பாத்திரங்கள்

1. Don FERNAND	தோன் fபெர்னுன்	கஸ்தீய் நகர் அரசர்
2. Don DIEGUE	தோன் தியே:.	(மாஜி சேனுதிபதி) ரொத்ரீகின் தந்தை
3. Don GORMAS	தோன் கொர்மாஸ்	(புதிய சேனுதிபதி) ஷிமேனின் தந்தை
4. Don RODRIGUE	தோன் ரொத்ரீஃ	(குதிரை வீரன்) ஷிமேனின் காதலன் (கதாநாயகன்)
5. Don SANCHE	தோன் சான்ஸ்	(படைவீரன், வில்லன்)
6. Don ARIAS	தோன் அரியாஸ்	(படை வீரன்) தோன்சான்ஷின் நண்பன்
7. Don ALONSE	தோன் அலோன்ஸ்	,, ,, ,,
8. அரச மைந்தன்	(7 வயது சிறுவன்)	
9. URRAQUE	யூராக்	(அரச குமாரி) ஷிமேனின் சிநேகிதி
10. CHIMENE	ஷிமேன்	ரொத்ரீகின் காதலி (கதாநாயகி)
11. LEONOR	லெயோனேர்	(அரச குமாரியின்) பணிப்பெண்
12. ELVIRE	எல்வீர்	ஷிமேனின் பணிப்பெண்
13. PITER	பீட்டர்	அரச குமாரியின் வேலையாள்
14. மந்திரி		

பிரதானிகள் — படைவீரர்கள் — காவலாளி முதலியோர்

"லெ ஸீத்" "LE CID"

காட்சி — 1.

[நந்தவனத்தில் ஷிமேனும், பணிப்பெண் எல்வீரும் உலாவி வருதல், தோன் ரொத்ரீக் ஷிமேனைச் சந்தித்தல்]

எல்வீர் - ஆட்டபாட்டங்கள் இருக்கட்டும், நான் சென்று மலர் கொய்து வருகிறேன். மாலைப் பொழுதாகிறது அல்லவா?

ஷிமேன் – ஆமாம், நீ சென்று கொண்டுவா. நான் என்னிடம் இருக்கும் மலர்களைக்கொண்டு கொத்து சேர்க்கிறேன்.

(பாடிக்கொண்டே கொத்து தொடுக்கிருள்)

எல்வீர் - ஷிமேன், ஷிமேன் இங்கு ஓடிவாயேன்! ஓடிவா!

ஷிமேன் - என்னடீ எல்வீர்! அவர் வந்து விட்டாரா ஏதோ? எங்கேயடி?

எல்வீர் - என்ன பசப்பு......இல்லை ஷிமேன்...... உன் காதலர் இல்லை... உன் காதலருக்கு மிகவும் உகந்த மல்லிகை இதோ மலர்ந்திருப்பதைப் பார்!

ஷிமேன் – போடிப்போ! உன் பூவும் நீயும்! நாம் வந்து வெகு நேரமாகிறது, இன்னும் அவர் வரவில்லையே என்று ஏங்குகிறது என் மனம். அவர் வராததால் இப்பூங்காவே ஒரு காடாகவல்லவோ தோன்றுகிறது! ஆமாம் எல்வீர் அவர் ஏன் இன்று இன்னும் வரவில்லை? எங்கே போயிருப்பார்?

எல்வீர் - ரொத்ரீக் தானே! உன் காதலர் எங்கே எப்போது வருவார் என்பது உங்களிவருக்கும் தெரியாமல் எனக்கெப்படி தெரியும்? எனக்கு இதுதான் வேலையோ! இப்பூங்காவின் அழகிய காட்சிகளைக்கண்டு களிக்காமல்...... காதலனும்...கத்தரிக்காயம்... வரவில்லையாம்.

ஷிமேன் - போதும் போதும், இவ்விதம் இனி நீ பேசினல் எனக்குப் பொல்லாத கோபம் வரும் தெரியுமா?

எல்வீர் - ஓகோ... நீ மகா கோபக்காரி யென்பது எனக்குத் தெரியாதே! இனிமேல் உன்னை வளர்த்த என்னை. உன் வீட்டை விட்டு...ஏன் நாட்டையே விட்டு—விரட்டிடுவாய் போலிருக்கிறதே!

ஷிமேன் — அது என் தந்தையின் விருப்பம். என்னிடம் பேசவேண்டாம் ! போ ! !

(தோன் ரொத்ரீக் வருவதைக் கவனித்து விட்டாள்)

எல்வீர் — போகத்தானே வேண்டும்... இப்போது நான் இங்கிருப்பது கூடாதுதான் ! போகிறேன்.

(ரொத்ரீக் ஷிமேனின் கண்களைப் பொத்துகிருன்)

ஷிமேன் — என்னிடம் விளையாடாதே! உன்னைத்தான் என்னிடம் பேசவேண்டாம் என்றேனே... விடு என் கண்களை... ஹா நீங்களா... எப்போது வந்தீர்கள்...... ஏன் இந்த மௌனம்... என்னிடம் கோபமா ?

ரொத்ரீக் — இல்லாமலென்ன ! நீதான் பேசவேண்டாம்... கண்களை விடு... விலகிப்போ ! என்ருயே !...

ஷிமேன் — ஓகோ அதுவா... நீங்கள்தான் நான் சொல்லியபடி இல்லாமல் இதோ தான் பேசிவிட்டீரே.

ரொத்ரீக் — ஷிமேன், பிடிவாதமும் கோபமும் உன்னுடன் பிறந்து விட்டன ! ஆமாம, உனக்கும் எல்வீருக்கும், என்ன சச்சரவு. அவள் உன்னை தன் மகளெனக் கருதும்போது, நீ அவளைத் தாயெனப் பாவிக்காமல்...

ஷிமேன் — எல்வீரை என் தாய்க்குப்பின் தாயாகமட்டுமல்லாமல் என் உயிர்த் தொழியாகவும் அல்லவா பாவிக்கிறேன்.

ரொத்ரீக் — அப்படியென்ருல் அவளை நீ ஏன் விரட்டிஞய் ?

ஷிமேன் — நான் விரட்டினேஞ ! .. அது ஈசனின் கட்டளையல்லவா ! எல்வீர் என்னைவிட்டு விலகியிராவிட்டால் நாம் இப்படித் தனித்து குதூகலிக்க முடியுமா? .. அன்பரே நம் காதலுக்கு காவியங்கள் பல சொல்லிவிடும் இம்மலர்க் கொத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

எல்வீர் — ஆஹா... தனித் தனியே நின்று அழகைத் தந்த இம்மலர்கள் உன் கைத் திறனுல் ஒன்றித்துச் சேர்ந்து இறுக இணைந்திருப்பதால் ஒரு தனி அழகும், மோகன மணமும் அல்லவா வீசுகின்றன.

ஷிமேன் — அவ்வித நறுமணம் வீசும் நம் திருமண நந்நாளே நமக்கோர் பொன்ஞள் அல்லவா?

ரொத்ரீக் — அந்த இன்பத் திருநாள் அதிக தூலைவிலில்லை தெரியுமா ஷிமேன் !

ஷிமேன் — அப்படியா !

(பாடுகிருள். அவளுடன் சேர்ந்து ரொத்ரீகும் பாடுகிருன்)

காட்சி — 2.

[வீதி — ஷிமேனும், எல்வீரும்]

எல்வீர்— ஷிமேன் ! உங்களிருவரின் இணைபிரியாகக்காதலுக்கு இறைவன் துணை புரிவார் !

ஷிமேன் — ஆனால் என் தந்தை துணை செய்வாரா ?

எல்வீர் — ஏன் அப்படிச் சொல்கிறாய்? உன் காதலர் ஒரு வீர சேனாதிபதியின் புதல்வர் என்பது உன் தந்தை அறியாததா ? மேலும், உன் தந்தையும், ரொத்ரீகின் தந்தையும் ஆப்த நண்பர் களல்லரோ ?

ஷிமேன் — உண்மைதான்... இருந்தாலும் இராணுவ சிநேகமெல்லாம் நீடித்திருப்பதற்கு இடமேது எல்வீர் ?... குணம் மாறிய என் தந்தைக்கு, என்மனம் நாடிய மணாளன் பிடிக்குமோ என்னமோ தெரியவில்லையே !

எல்வீர் — கவலை கொள்ளாதே ஷிமேன், நாளையே நான் உன் தந்தையின் மனதை அறிந்து வந்து சொல்கிறேன். வா...

காட்சி — 3.

[தோன் கொர்மாஸின் அறை — எல்வீர், தோன் கொர்மாஸ்]

தோன் கொர்மாஸ் — எல்வீர் ! ரொத்ரீகைப்பற்றி எனக்கு நீ அதிகம் சொல்லவேண்டியதில்லை. ரொத்ரீகை நான் நன்கறிவேன். என் மகள் ஷிமேன், அவனை நேசித்து வருவதையும் தெரிந்து தான் இருக்கிறேன் ! ரொத்ரீக் வீரத் தியாகிகளின் குடும்பத்தில் பிறந்தவன், வெற்றியென்னும் ஊற்றிலே உதித்தவன். அவனது தந்தை தோன்தியேக் தன் வயோதிக இக்காலத்திலும் அவரது நெற்றியில் விளங்கும் வில் மடிப்புகள் ''அவர் முற்காலத்திய வீரசிகாமணி'' என்பதை இன்னும் நினைவூட்டும். தந்தையைப் போல் தனயன் என்றுப்போல், ரொத்ரீக் பிற்காலத்தில், ஒரு வீரனாகத்திகழ்வான் என்பது நிச்சயம். ஷிமேனின் காதலைப் பூர்த்தி செய்வதே என் இலட்சியம்... இதைப் பற்றிப் பேச இப்போது எனக்கு நேரமில்லை...அரசர் தம் மகனுக்கு நற்போதகரைத் தேர்ந்தெடுக்க இன்று சபை கூட்டியிருக்கிறார். நான் ஆஜராக வேண்டும்.

எல்வீர் — [உடைவாளை எடுத்து கொர்மாஸிடம் கொடுத்துக் கொண்டே] அந்த மேலான பதவி யாருக்குக் கிடைக்குமோ ?

தோன்கொர்மாஸ்— அம் மேலான பதவியை ஏற்க யோக்கிதை யுடையவர் என்னைத்தவிர இந்நாட்டில் எவருமில்லை ! ஏனென்ருல், அரசர் அன்ருடம் என் கை உதவியைத்தான் நாடுகின்ருர். ஆகையினுல் அப்பதவி எனக்குத்தான் கிடைக்கவேண்டும் ஏன், நிச்சயம் கிடைக்கும்... அதன் பின் சபை கலைந்ததும் தோன்தியேக் அவர்களைக் கண்டு ஷிமேனின் கல்யாண விஷயத்தையும் கலந்து பேசி முடிவுசெய்து வருகிறேன்.

காட்சி—4.

[*வீதி — எல்வீர் — ஷிமேன்*]

ஷிமேன் — எல்வீர், என் பாக்கியமே பாக்கியம். என் மனம் இந் நற்செய்தியால் துடிக்கும் துடிப்பைப் பார்த்தால் எனக்குப் பயமாகவல்லவோ இருக்கிறது ! அளவுக்கு மீறிய ஆசையை காமம் என்கிருர்கள்; அதுவிரைவில் அழிந்து போகுமன்ருே ! அதன்படி என் காதலுக்கு இடைஞ்சல்வராதே......எல்வீர் இதோ பார் என் வலது கண் இமைகள் துடிக்கின்றனவே அது ஏன் ?

எல்வீர் — பயங்கொள்ளதே ஷிமேன் உங்கள் இருவரது உண்மைக் காதலுக்கு இறைவன் ஒருபோதும் தீங்கு செய்யமாட்டார். உன் தந்தை இன்று ரொத்ரீகின் தந்தையிடமிருந்து நல்ல பதில் கொண்டு வருவார் பாரேன் !

காட்சீ — 5.

[அரண்மனைத் தர்பார் கூடி இருக்கிறது. தோன்பெர்னுன்.
தோன்தியேகு தோன்கொர்மாஸ், யூராக்
அரசகுமாரன், மற்றும் பிரதானிகள்]

அரசர் — அன்புப் பிரதானிகளே ! அருமைக் குடிமக்களே ! என் அருமந்த புதல்வன் தக்கபருவமெய்தி யிருப்பதால் அவனுக்குப் பயிற்சிகளைக் கற்பிக்க ஒரு நற்போதகரை நான் தேர்ந்தொடுத்திருக்கிறேன். அன்னவரை அறிமுகப்படுத்தவே யான் உங்களை இங்கே கூட்டியிருப்பது !

கல்வி ஒழுக்கத்துடன் பல வித்தைகளும் மக்களுக்குத் தேவை. ''வில் வித்தை, துப்பாக்கிப் பயிற்சி முதலியவைகள் நம் நாட்டிற்கு மிகவும் முக்கியமானவை ,, என்பதை நீங்கள் நன்கறிவீர்கள். சகல வளம் பொருந்திய நாட்டின் பேரில் சர்வ

தேசத்தின் பொருளுமைக் கண்ணேட்டம் சதா இருந்து கொண்டே தான் இருக்கும்......இன்று நம் நாடு எதிரிகளின் பார்வையில் சிக்குண்டிருக்கிறது. அதன் கண்காணிப்பை நம் புதிய சேனதிபதி தோன்கொர்மாஸ் அவர்களே பொறுப்பேற்றிருக்கிறார். அவரது வீரம் மெச்சத் தகுந்ததாகவே காணப்படுகிறது! நமது செல்வ நாடு, முன்னர் எதிரிகளின் வசம் போகாது காத்ததும், பலப்படுத்தி வைத்ததும் நமது வீர சிகாமணி மாஜி சேனதிபதி தோன்தியேக் அவர்களே... அண்ணர் நமது நாட்டை மீட்பதற்காகத் தனது இரண்டு முதல் புதல்வர்களையும் போர்க்களத்தில் பலியிட்டிருக்கிறார். மக்களை இழந்தும் மனந்தளராது போர் புரிந்து வெற்றியைக் கொணர்ந்தவர்! அவரது புகழ் என்றும் குன்ருது! இன்றும் அவரது இளைய குமாரன் தோன் ரொத்ரீக் படையிற் சேர்ந்து பல்வேறு இடங்களில் வீரத்துடன் போரிடும் திறமையின் இரகசியம், தோன் தியேக் அவர்களின் வீரப்போதனைகள் தாம் என்பதை மறுக்கமுடியாது. தற்போதோ அவரின் வயது விருத்தாப்பியத்தை எட்டிப்பிடித்திருக்கிறது. ஆகவே அப்பெரியாரின் கரங்களில்தான் என் தனயனை ஒப்புவித்துத் தக்க போதனைகளைக் கற்பிக்குமாறு நியமித்திருக்கின்றேன்,

மந்திரி — நியாயமே.

பிரதானிகள் — எல்லோருக்கும் சந்தோஷம்.

பிரஜைகள் — ஆம்......ஆம்.

தோன் தியே:— மாட்சிமை நிறைந்த மன்னருக்கும், மன்றத்தில் குழுமியிருக்கும் மற்றனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி! மன்னர், என் விருத்தாப்பிய வயதில் என்னைப் பெருமைப் படுத்துவது கண்டு மனமகிழ்கின்றேன். நான் இப்பதவியை எதிர்பார்க்கவே யில்லை. மன்னர் என்னைத் தேர்ந்தெடுத்தது கடவுளின் திருவுள்ளமே யல்லாது வேறில்லை என்பதை நான் உணர்கின்றேன ஆகவே கடவுளின் இவ்வேற்பாட்டால் என் முயற்சி வெற்றி அளிக்கும் என நம்புகின்றேன்.

அரசர் — மிக்க சந்தோஷம், இதோ இன்று முதல் என் புதல்வனை உம்மிடம் ஒப்படைக்கின்தேன்.

காட்சி — 5.

[வீதி — தோன் கொர்மாஸும், தோன் தியேகும்]

தோன் கொர்மாஸ்— என்ன பெரியவரே! அரசனை முன்னரே மயக்கிவிட்டீர் போலிருக்கிறதே, எனக்கே தகுந்த அவ்வுயர் பதவியைத் தட்டிக்கொண்டு வந்து விட்டீரே...அரசன் இன்று

உமக்குப் பெரிய பெருமையை அளித்து விட்டான்.

தோன் தியே:— இப்பெருமையை அரசர் என் குடும்பத்திற் களித்தது அவர் ஒரு நீதிமான், செய்நீநன்றி மறவா மன்னன் என்பதை நிலை நாட்டுகிறது.

தோன் கொர்மாஸ்— அரசர்கள் என்னதான் பெரியவர்களாய் இருந்தாலும் நம்மைப் போலொத்தவர்கள்தானே. மற்ற மனிதர் களைப்போல அரசர்களும் தவறிவிடக் கூடுமல்லவா? மன்னரது இந்த நியமனம், செய்திடுங் காரியங்களுக்குச் சரியான நன்றி செலுத்தத் தெரியாததை இன்றைய சபையில் வெளியாக்கி விட்டது.

தோன் தியே: — கொர்மாஸ் அவர்களே! தங்களுக்குக் கோபத்தை மூட்டும் இப்பதவி விஷயத்தைப் பற்றி இனிப் பேசா திருப்போமே. கிடைப்பவர்களுக்குத்தான் கிட்டும் அதிர்ஷ்டம் என்று விட்டுத்தள்ளும்...அரசரின் ஆணையை ஆராய்ந்து விடுவதே மேல். படைத்தலைவரே! அரசர் இன்று எனக்களித்திருக்கும் பெருமையில் இன்னொன்றையும் நாம் சேர்த்துக்கொள்வோமே! இச்சுப சேதியில் எனதில்லத்தையும் உமது இல்லத்தையும் கடவுளின் சாட்சியாக இணைப்பேற்படுத்திக்கொண்டால் இந்நாட் டிற்கே உயர்வளிக்கும் என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ! உமக்கோ ஏக புதல்வி ஷிமேன் இருக்கின்றாள், எனக்கும் ஒரே மகன் ரொத்ரீக் இருக்கின்றான் இவ்விருவர்களது திருமணம் நம்மை ஒருமனதாக்கும்.. ஆகவே இதற்கிசைந்து என் மகனை உமது மருமகனுக்கிக்கொள்ளும்.

தோன் கொர்மாஸ் — (தனக்குள்) நம்முடைய உயர்வான அந்தஸ்திற்கு இம்மருமகன் மிக ஏற்றவனே... (தோன் தியேகிடம்) ஆனால் எனனால் உமக்குக் கிடைக்கும் மற்றொரு புகழைக் கண்டு அதிக இருமாப்பைக்கொள்ளும் உம் நெஞ்சம். இதனை விடுத்து முதலில் உமது சிஷ்யன் அரசகுமாரனுக்கு நாட்டை எப்படி ஆளவேண்டுமென்பதையும், ஒழுங்குடன் பிரஜைகளை எப்படிச் சட்டத்தின்கீழ் அடக்கவேண்டுமென்பதையும். நல்லவர்களை அன் பாலும், கொடியவர்களைக் கொடூரத்தாலும் எவ்வாறு பணிய வைக்கவேண்டு மென்பதையும் போதித்து வாரும்...போரில் தளரா நெஞ்சங் கொள்ளவேண்டு மென்பதையும், எடுத்துக்காட்டுகளால் எடுத்துரைத்துப் பணியாற்றும்.

தோன் தியே: — எடுத்துக்காட்டுகளை நான் அவனுக்கு எடுத் துரைப்பதேது அரசகுமாரன் என் ஜீவிய சரிதையை வாசித்தாலே விளங்குமே! நாட்டை ஆள்வதும், சேனையைச் செலுத்துவதும், எதிரிகளை முறியடிப்பதும்...

தோன் கொர்மாஸ் — நிறுத்தும்... உம் கதை பழங்கதை. மேலும் வாசித்தறிவது கடமைகளை மாற்ருகக் கற்க ஏதுவாகும். கண்முன் நடக்கும் காரியங்களுக்கே நன்மதிப்பதிகம். காலப் போக்கில் நீர் முன்னர் வீரனுக விளங்கினீர். இந்நாளில் நான் ஜெய வீரனுகத் திகழ்வதை அரசன் மைந்தான் தான் அறிய மாட்டானு என்ன...!

தோன் தியே.: — வாஸ்தவமே... நான் முன்னர் புரிந்த வீரச் செயல்களைத்தானே இன்று நீர் சாதிக்கிறீர்... என்ன இருந்தாலும் அரசு மட்டில் நமக்குள் ஒரு வித்தியாச விஸ்வாசந்தானே கொண்டிருக்கிறது.

தோன் கொர்மாஸ் — இல்லை...... எனக்கே உரித்தான ஒரு பதவியை அபகரித்துக்கொண்டீர்... பழகிய பூனையல்லவா, மன்னனை மயக்கிவிட்டீர்.

தோன் தியே.: — மன்னனின் மயக்கத்திற்கும் மரியாதைக்கும் காரணம் என் முற்காலத்திய வீரச் செயல்கள்தான் என்பதை மறந்து விடாதீர் !

தோன் கொர்மாஸ் — மரியாதை ! மரியாதையை அரசன் ஒருகால் உமது வயதிற்குக் கொடுத்திருக்கலாம்...

தேன் தியே.: — வீரச் செயல்களுக்கு என்றுமே தனி மதிப்பு உண்டு !

தோன் கொர்மாஸ் — எனது தீரமெல்லாம் அரசனது புத்திக் குப் புலப்படவில்லையோ ?

தோன் தியே.: — அவைகள் ஒருக்கால் ஒளி குன்றி மங்கி இருக்கலாம்.

தோன் கொர்மாஸ் — என்ன சொன்னுய் கிழவனே ! உன் கிழட்டுத் துடுக்கிற்குத் தகுந்த வெகுமதி இதுதான்...... இந்தா
[கன்னத்தில் அறைகிருன்]

தோன் தியே.: — ஆ! கொர்மாஸ் என்னையா அவமதித்தாய்? இந்த அவமானத்துடன் வாழ்வதைக் காட்டிலும் மாள்வதே மேல், வா... இந்த வாளிடம் உன் தீரத்தைக் காட்டு...

தோன் கொர்மாஸ் — ஹ ஹ ஹ ஹா... கிழட்டுச் சிங்கமே... உன் கேவல பலவீனத்துடன் என்னை என்ன செய்ய நினைக்கிருய் ?

தோன் தியே.: — ஆ கடவுளே இது என்ன ? அவமானத்தால் என் வீரம் என்னை விட்டகன்றதா ? என் கைகள்...

தோன் கொர்மாஸ் — ஹ ஹ ஹா... உன் வாள் என்னிடம் உள்ளதென் றெண்ணிக்கொள், சென்று வா உன் ஜீவிய சரிதையில் இச்சம்பவத்தையும் இணைந்து அரச குமாரனைப் படிக்கச் சொல்... நான் சென்று வருகின்றேன்

காட்சி — 7.

[தோன் தியேஃ அவர்களின் ஆயுத அறை]

தோன் தியே.:—வெட்கம், வெட்கம்.. அவமானம், அவமானம்... ஏ ! சபிக்கப்பட்ட கிழட்டுப் பருவமே ! இன்று நீ என் எதிரியானாய்! இந்த அவமானத்திற்குத்தானா இன்றுவரை உயிர் வாழ்ந்து வந்தேன்... இந்நாட்டைக் காக்கப் பன்முறை எதிரிகளை முறியடித்து விரட்டிய இக்கரம் இன்று என் சொந்த துவேஷம் தீர்க்க மறுத்து நடுங்கினதே !... அவமானம் ! இந்த அவமானத்துடன் நான் உயிர் வாழ்வதா ? மேலும் [redacted] அரச குமாரனுக்கு நான் ஆசிரியனாய் இருப்பதா ? மானமிழந்தவர்க்குத் தகுதியில்லையே இவ்வேலை... போர்க்களத்தில் பகைவர்களை மருட்டி விரட்டியும், பலர் உதிரத்தை உறிஞ்சியும் எனக்குப் புகழளித்த வாளே !...இன்று நீ என் வீரத்தைத் தடுக்க உதவினாயேயன்றி, என் வஞ்சத்தைத் தீர்க்க உதவவில்லை. இனி நீ எனக்கு அலங்காரப் பொருளாய் விளங்குவதைவிட என் வஞ்சம் ஒரு வீரனின் கரங்களில் இருத்தல் வேண்டும்... (ரொத்ரீக் வருவதைக் கண்டு) ஆம் இதோ என் மகனும் வருகின்றான்...

ரொத்ரீக் — அப்பா !...

தோன் தியே.: — வா! ரொத்ரீக் வீரமுண்டோ உன் செஞ்சினில்!

ரொத்ரீக் — தந்தையே ! தாங்களாய் இல்லாது வேறொருவராய் இருந்தால் இக்கணத்தில் காட்டி இருப்பேன் அதனை.

தோன் தியே.: — ஹ ஹா... உண்மைக் கோபம் கொந்தளிக்கிறது ! என் இரத்தத்தின் உயிர்த் துடிப்பை இன்றுதான் காண்கின்கிறேன் நான் ! என் வாலிபத்தின் மறுபிறப்பின் பிம்பத்தையும் காண்கிறேன் இன்று ! என் மகனே வா ! என் இரத்தமே வா ! என் வஞ்சந் தீர்க்க விரைந்து வா என் வீரனே !

ரொத்ரீக் — தந்தையே என்ன வஞ்சமோ ?

தோன் தியே.: — நெஞ்சம் பொறுக்க இயலாத வஞ்சம்...... வஞ்சித்தவனின் உயிர் வானுலகம் சென்றிருக்கும் உடனே !

ஆனால் என் ஆசையைப் பூர்த்தி செய்யவில்லை என் வயோதிகம். அதனால் உன்னை ஏவுகின்றேன் அவனைப் பழிவாங்க...ஒருவன் பொறுமை பொறுக்காமல் அறைந்து விட்டான் என் கன்னத்தில்.

ரொத்ரீக் — என்ன தங்களையும் ஒருவன் தொட்டானா ?

தோன் தியே:—ஆம் ! அப்பேடியிடம் - கொடிய அரக்கனிடம் உன் வீரத்தை விளக்கப் போ ! அவனது உதிரப் பெருக்கத்தில் தான் என் அவமானக் கறையைக் கழுவமுடியும். அவனை மரண லோகத்திற்கு அனுப்பு ! அல்லது நீ அங்கே போ ! இன்று உனக்கு எதிரியாக ஒரு வீரனையே உனக்களிக்கின்றேன் ! அவனது வீரச்செயல்களை என் கண்ணார நானே கண்டிருக்கின்றேன். அவன் பெரும் படை வீரன்... படைத்தலைவனும் கூட...

ரொத்ரீக் — கட்டுக்கதைகள் வேண்டாம் தந்தையே கூறும், பழிக்குப்பழி வாங்குகின்றேன் ! கூறும் அவன் யாரென்று !

தோன் தியே: — ரொத்ரீக்...அவன்...ஷிமேனின்தகப்பனே !

ரொத்ரீக் — யார் ?... என் காதலியின்...

தோன் தியே: — ஆம் உம் காதலியின் தந்தையேதான்... நீ ஷிமேனின்மேல் கொண்டுள்ள காதலை நன்கறிவேன் நான்... ஆனால் பெண் அன்பைவிட, பெற்றோரன்பு பெரிதென்பதை மறவாதே ! காதலைப் பெரிதெனக் கருதினால் கண்யத்தைக் காப் பாற்றமுடியாது ! என் மானமழிந்தபின் உன் திருமணம் நிகழ்வது சாத்தியமா ? .... வீர சேனாதிபதியின் தீரப் புதல்வன் என்று நீ விளங்கவேண்டுமானால் என் அவமானத்தை அழிக்க விரைந்து செல் எனக்கு நீ கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்று ! போ ஓடு வேண்டுமென்றால் பறந்து சென்றேனும் நம் வஞ்சத்தைத் தீர் போ.. இதோ.. என் வாள்.

காட்சி — 8.

[ரொத்ரீக் தனிமையில்]

ரொத்ரீக்ச — சங்கடமான நிலையில் சிக்குண்டு தவிக்கின்றேன் நான் ! தோன்கோர்மாஸ் என் காதலியின் தந்தையல்லரோ ! ஷிமேன் நீ அன்புடன் நேசிக்கும் உன் தந்தையிடம் நான் வாள் யுத்தம் செய்வதா ! என்னைப் பெற்றவரை திருப்தி செய்ய, பெண்ணே ! உன்னை நான் இழப்பதா ! அதனால் நம் காதல் அழிவதா ! ஆசனே பாறுங்கல்லில் பதித்த எங்கள் காதல் சித்தி

ரத்தை அழிக்க முற்பட்டாயோ ! மெய்க்காதலே! நீ எங்கள் உள்ளங்களை இணைத்த இணைப்பை நான் அறுத்தெறிவதா ! முடியாது ! காதலின்றேல் சாதல் வேண்டும் நான் .. ஐயோ இன்று நான் இருதலைக்கொள்ளி எறும்பானேனே ! என் தந்தையின் வஞ்சந்தீர்க்காமலும், காதலின் இன்பத்தை அநுபவியாமலும் நான் மாள்வதா !... என் அருமைத் தந்தையை அவமானப்படுத்தியவன் மகளல்லவா என் காதலி ! அவளை நான் மணப்பதா ! என் தந்தையின் மானம் என் மானமன்றோ ? மானமிழந்து காதல் கொல்வதா...காதல்...காதல் ..காதலைவிடக் கடமையல்லவா பெரிது ! அழிந்தொழியும் காதலின்பத்திற்காக, அழியாப் புகழை இழிவு படுத்துவதா ? வீரப் பரம்பரையில் தோன்றிய என் குடும்பத்திற்கு என்னால் இழிபெயர் வருவதா ?... என் தந்தையின் அவமானத்தை அழித்து அவர் ஆசியைப் பெறுவதே மேல். எங்களுக்கு அவமானக் கறையை உண்டாக்கிய அவ்வரக்கனை ஒழிப்பேன் இல்லையேல் அவன் வாளுக்கு என் உயிரை இரையாக்கி என் குடும்பப் பெருமையைக் காப்பேன்.

காட்சி — 9.

[அரசகுமாரி யூராக்கின் அறை. ரொத்ரீகின் படமொன்றைக் கையில் வைத்துக்கொண்டு]

யூராக் — இவ்வீரர் அரச வம்சத்தில் அவதரித்திருக்கலாகாதா? அவரின் அங்க அழகே எனதுள்ளத்தில் ஊடுருவி இன்ப உணர்ச்சிகளை எழுப்புகின்றதே ! இவரை என் சிநேகிதி ஷிமேன் மட்டும் நேசித்திராவிட்டால் அவருக்குப் பூரண இடங் கொடுத்திருப்பேன் எனதுள்ளத்தில்... என் செய்வது !... ஆம்.. ரொத்ரீயின் அன்பென்னும் அலையில் அகப்பட்டிருப்பதால்தான் ஷிமேன் என்னை மறந்துவிட்டாள் போலிருக்கிறது ! சரி இருக்கட்டுமே .. பீட்டர்...ஹேய் பீட்டர் இங்கே வா...

[பீட்டர் ஓடி வருகிறான்]

பீட்டர் — ஏம்மா இதோ வந்துட்டேன்.

யூராக் — விரைந்து சென்று என் சிநேகிதி ஷிமேனை நான் அழைப்பதாகச் சொல்லி உடனே கூப்பிட்டு வா !

பீட்டர் — இதோ அழைத்து வருகிறேனம்மா !...

யூராக் — ஏனடா நிக்கிற ? போயேன் !...

பீட்டர் — நான் போகிறதா இருந்தா...

யூராக் — என்னடா இது ! என்ன வேண்டும்...போ சீக்கிரம்.

பீட்டர் — கோச்சிக்கா்திங்க...... என் கை கால்களுக்கு வேலை கொடுத்து நான் ஷிமேனம்மாள் வீட்டுக்குப்போற வரையில் என் வாய்க்கு ஒன்றும் வேலைக்கொடுக்கலியே என்றுதான்...

யூராக் — உன் வாய்க்குத்தானே... நல்ல பாட்டா ஒன்றைப் பாடிக்கொண்டே போயேன் !

பீட்டர் — பாட்டா......ஏம்மா......பாட்டா... நானு பாடனும். அதுவும் பாடிக்கொண்டேவா போகனும்... நான் வாயைத்திறந்தால் இவ்வூரிலுள்ள கழுதைகள் எல்லாம் என் பின்னுல்தான் !

யூராக் — ஹ ஹ ஹா... நல்ல விகடனப்பா... ஒகோ இத்தட்டில் உள்ளவை உன் கண்களில் பட்டுவிட்டனவோ ... இந்தா இவைகளை வாயில் போட்டுக்கொண்டு ஓடு சீக்கிரம்...

பீட்டர் — இதோ... சிட்டுக்குருவியா பறந்து வந்து விடுகிறேன் பாருங்களேன்...

[ரொத்ரீக் படத்தின்முன் ஆனந்த நடனம் பாட்டு]
வேலைக்காரி லெயோனோர் வருகிருள்.

லெயோனோர் — என்னம்மா, இது என்னம்மா படம்... இது யார் படம் ?

யூராக் — (படத்தை மறைத்துக்கொண்டு) இதுவா இது இது...இல்லையே...இது...

லெயோனோர் — எங்கே அதைக் காட்டுங்கள்... (பிடுங்கிக் கொண்டு) ஆ ! இது வீரர் ரொத்ரீகின் படமன்றோ ! இது இங்கே ஏன் ?

யூராக் — ஏன், வீரர்களின் படம் அரசர்களின் வீட்டில்தானே இருக்கவேண்டும். லெயோனோர் நீயே சொல். இவ்வீரரை ஷிமேன் நேசிப்பது கூடுமா ! வீரர்கள் அரசர்களுக்கு ஒத்தவர்களல்லரோ ? ஆகவே இவ்வீரரை நான் நேசிக்கிறேன்.

லெயோனோர் — எனன ரொத்ரீகை நீங்கள் நேசிக்கிறீர்களா ?

யூராக் — காதலென்னும் கள்வன், யாரைத்தான் கவராமல் விடுகிருன். இதோ உன் கரங்களை வேண்டுமானுல் என் நெஞ்சில் வைத்துப் பார். அவரின் திருநாமத்தைக் கேட்டதும் என் உள்ளம் துடி துடிப்பதை உணர்வாய்.

லெயோனோர் — மன்னிக்கவேண்டும்... தாங்கள் ஒரு அரசிளங்குமாரி யென்பதை அறிவுறுத்துகிறேன்... நீங்கள் ஒரு பட்டாள சிப்பந்திக்கு இடமளிப்பது தவறு ! அரசர் என்ன சொல்லுவார் ? இந்தக் கஸ்தீய் நகரின் பிரஜைகள் தாம் என்ன நினைப்பார்கள் ?

யூராக் — உண்மைக் காதலுக்குக் கண்தெரியா தென்பதை அறியாயோ நீ... நான் இத்தேசத்து அரசனின் மகளாய் இருப்பதினுலேயே கூறுகிறேன்; வீரர் ரொத்ரீகின் அழகிய தோற்றம் என் உள்ளத்தில் குடிகொண்டு விட்டது !

லெயோனோர் — ரொத்ரீக் ஷிமேனின் உயிர்க் காதலர் அல்லவோ ? நாள்

பீட்டர் — (திரும்பி வந்து) அம்மா தங்கள் உத்திரவின்படி ஷிமேன்னம்மாள் வந்து ஹாலில் காத்துக்கொண்டிருக்கிருர்கள்.

யூராக் — லெயோனோர் நீ முதலில் சென்று ஷிமேனைக்கவனி. இதோ பின்னுல் வருகிறேன்...

லெயோனோர் — உடன் வந்தாலென்ன ! காதல் கனவைத் தனிமையில் கண்டு முடித்தபின் வருவீரோ !...

யூராக் — இல்லை என் அகத்தின் அழுக்கை கழுவிவிட்டு வருகிறேன் ! நீ சென்று ஷிமேனை உபசரி...

(லெயோனோர் சென்றபின்)

யூராக் — (தனிமையில்) ஆம் நான் கட்டினது மணற்கோட்டை தான்... பிறர் ஆசிக்கும் ஒன்றையே நாமும் இச்சிப்பது ஆகாது தான் ! இருப்பினும் ஷிமேனின் உள்ளத்தையும் சரிவர அறிந்து வருவோம்.

காட்சி — 10.

[வீதி — கொர்மாஸும் அரியாஸும்]

தோன் கொர்மாஸ் — அரியாஸ், உண்மையாகக் கூறுகிறேன். என் இரத்தம் மிகவும் கொதித்துவிட்டது இன்று ! நான் தோன் தியேக் அவர்களை அறைந்தது கேவலம் என் பொருமையை வெளியாக்கி விட்டதெனலாம் !

அரியாஸ் — உம்போன்ற வீரர்களுக்கு இது சகஜம். மேலும் அரசனின் அறிவில்லாப் போக்கு இவ்வித முடிவைத்தானே அளிக்கும் !

தோன் கொர்மாஸ் — இவ்வரசனே எனக்கு ஏதாகிலும் தண்டனை விதித்தால் !

அரியாஸ் — தங்களது, மீறிய கோபத்துடன், அச்சமும் தொடர்ந்து தான் இருக்கிறது ! இருந்தாலும் தாங்கள் அதைரியப் படலாமா ! அரசர் உம்மை அதிகமாக நேசிக்கிருர்: அவரது

கோபத்தைச் சாந்தி படுத்திவிடலாம்...ஆமாம் அரசரின் இஷ்டத்தைத் தடுக்கவில்லையே நீர்!

தோன் கொர்மாஸ் — தடுக்கவில்லை. ஆனால் தவறிவிட்டேன்!

அரியாஸ் — அர்சர்களையொத்த பெரிய மனிதர்கள் தங்கள் சிப்பந்திகளின் குற்றங்களுக்காக அவ்வளவு சீக்கிரம் கடுமையான நடவடிக்கை எடுக்கமாட்டார்கள்!

தோன் கொர்மாஸ் — இம்... யார் கண்டது!... அரசனின் ஆணை என்னை அடக்கிவிட்டால் இந்நாட்டிற்கே ஆபத்து தான்!

அரியாஸ் — என்ன அரசனின் ஆணைக்கு அஞ்சுகிறீரா?

தோன் கொர்மாஸ் — இல்லை...... நீதிக்கு!

அரியாஸ் — கொர்மாஸ் அவர்களே! கவலை வேண்டாம், நான் முன்னே சென்று அரசரின் உள்ளத்தை மாற்றி வைக்கிறேன், நீர் பின்னால் வாரும்...

தோன் கொர்மாஸ் — நல்லது, சென்று வாரும்...

[கொர்மாஸ் வீதியைக் கடந்து ஒரு சோலையின் வழியே செல்கிறார்]

காட்சி — 11.

சோலை — கொர்மாஸ், ரொத்ரீக்]

தோன் கொர்மாஸ் — (தனக்குள்ளே) உயிருக்கஞ்சாத நான் தண்டனைக்கேன் அஞ்சவேண்டும்? என் சுகத்தை அடைக்கினாலும் அரசன் என் பெருமையைப் போக்கடிக்க முடியுமா!

[ரொத்ரீக் வருகை]

ரொத்ரீக் — பிரபுவே தங்களிடம் இரண்டே வார்த்தைகள்!

தோன் கொர்மாஸ் — என்னது சொல்.

ரொத்ரீக் — ஒரு சந்தேகம் தீரவேண்டும்! தோன்தியேகை அறிவீரல்லவா நீர்?

தோன் கொர்மாஸ் — ஆம்.

ரொத்ரீக் — அடக்கமாய் பேசுவோம்...... அவர்காலத்தில், அவருக்கிருந்த வீரமும், பெருமையும் புகழும் அறிவீர்தானே?

தோன் கொர்மாஸ் — இருக்கலாம்,

ரொத்ரீக் — அந்தப் பராக்கிரமும், வீரமும், என் கண்களில் பிரதிபலிக்கின்றதையும், அவரது இரத்தம் நான்தான் என்பதையும் அறிவீரோ?

தோன் கொர்மாஸ் — நீ யாராய் இருந்தாலென்ன ?

ரொத்ரீக் — ஓகோ அவனை இதோ சற்று நேரத்தில் தெரிந்து கொள்வீர் நீர் !

தோன் கொர்மாஸ் — வாலிபத்துடுக்கோ ! சிறுவனே !

ரொத்ரீக் — அஞ்சாமல் பேசும் ! நான் சிறுவன் உண்மை ! வீரத்திற்குப் பருவத்தைக் கணக்கிடுவார்களோ !

தோன் கொர்மாஸ் — உன்னை என்னிடம் ஒத்திட !... உனக்கித் தனை அதிகாரம் அளித்தது யார்... ஆயுதமே தாங்கி அறியாத அற்பனே !

ரொத்ரீக் — அற்பன் யார் என்பதை அறிந்து பேசும் பெரியவரே!

தோன் கொர்மாஸ் — என்ன ! நான் யார் என்பது தெரியுமா உனக்கு ?

ரொத்ரீக் — தெரியாமலென்ன ! நீரும் என்னைப்போலொத்த ஒரு மனிதர் என்பது எனக்கு நன்ருகத்தெரியும் ! என் நெஞ்சத்த ளவிற்கு உமக்குள்ள வீரம் இருக்கிறதென்பதை தெரிந்துகொள்ளும், தன் தந்தையின் பழிதீர்க்க முற்பட்ட எவனுக்கும் அச்ச மென்பதே அணுகாது ! உமது கரம் தோல்வியைக் கண்டதில்லை தான். ஆனல் அது தோற்றுப் போகாதிருக்க முடியாதென்ருே ?

தோன் கொர்மாஸ் — சபாஷ் உன் வீரமொழிகள் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டன ! உன்னைப் போலொத்த வீரர்கள் ஒரு சிலர் இருந்தால் எத்தனை பெரும் படைகள் வந்தாலும் இக் கஸ்தீய் நகரை அழிக்கவே முடியாது ! வீரசிகாமணியே, உன்னை என் பெண் ஷிமேன் நேசிப்பதறிந்து பெருமையடைகிறேன் நான். ஆனல் நீ உன் தந்தையின் பெருமைக்காக, காதலின் பெருமையை வெறுப்பது ஆகாது...... கடமையை கருதி மடமை கொள்ளாதே ! மடமையால் மாண்டான் என்று இழிக்கும் இவ்வுலகம் !... ஆனல் உன் மறைவால் எனக்கே அதிகம் வருத்தம் வாட்டும் !

ரொத்ரீக் — ஹ ஹ ஹா படைத்தலைவரே இந்த இரக்கச் சொற்கள் உமது வீராப்பைத்தான் அதிகப்படுத்துகிறது ! பெருமையைப் போக்கிக்கொள்ள விரும்பாத நீர், உயிருக்கஞ்சுவானேன் !

தோன் கோர்மாஸ் — அதிகப்பிரசங்கி ! இவவிடத்தை விட்டுச் செல்.

ரொத்ரீக் — வாயாடது நடப்போம் ! வாரும் !

தோன் கொர்மாஸ் — ரொத்ரீக், நீ உயிர் வாழ்வதற்கு அலுத்து விட்டாயா ?

ரொத்ரீக் — ஏன் நீர் சாகப் பயப்படுகிறீரோ ?

தோன் கொர்மாஸ் — என்ன உரைத்தாய் மடையனே...

(உடைவாளை உருவிக் கொள்ள, ரொத்ரீகும் அப்படியே செய்து வாள் யுத்தம் புரிகின்முன்)

காட்சி — 12

[அரசகுமாரி யூராக்கின் வீட்டு ஹால்]
ஷிமேன் — யூராக் — பீட்டர்.

யூராக் — என்னடி ஷிமேன், லெயோனேர் கொடுத்த பழ ரசத்தை நீ பருகவில்லையாமே ! ஏன் நான் உடனே வந்து உன்னை உபசரிக்க வில்லையென்று கோபமா ?

ஷிமேன் — கோபமா... அரசிளங் குமாரியாகிய உன்னிடமா ? யூராக் என்னமோ இன்று என் மனம் நிம்மதியில்லாமல் இருக்கிறது.

யூரோக் — நிம்மதியோடிருப்பதும், நிம்மதியைப் போக்கிக் கொள்வதும் நம்மிடமிருக்கிறது !... சரி...முதலில் இந்த ஆரஞ்சு ரசத்தை அருந்து... ஷிமேன் உனது பாட்டைக் கேட்டு வெகு நாளாயிற்றே எங்கே ஒரு பாட்டு பாடு !

(என்று கூறிக்கொண்டே... பியானோ அருகில் அமருகிறுள்.)

ஷிமேன் — பாட்டா !

யூராக் — ஆம், பாடினல் மனச்சாந்தி ஏற்படும்... எங்கே...

(பியானோ வாசிக்கிருள். ஷிமேனும் பாட ஆரம்பிக்கிருள். ஆனல் சோக கீதமே உருவாகி ஒலிக்கிறது)

யூராக் — ஆனந்தமாயிருக்கப் பாடுவாய் என்று நினைத்தேன் என் மனத்தையும் கலக்கும் சோக கிதமாய் பாடிவிட்டாயே... ஏன்... உன் உள்ளத்தில் என்ன சஞ்சலம் ?... உன் காதலருக் கேதேனும்...

ஷிமேன் — அவருக்கொன்றுமில்லை .. ஆனல் எங்கள் காதலுக்கு ஏதேனும் பங்கம் ஏற்படுமோ என்று அஞ்சுகிறது என் மனம் !... உனது இளைய சகோதரனுக்கு நியமித்திருக்கும் போதகாசிரியரின் பதவி விஷயமாக என் தகப்பனுருக்கும், ரொத்ரீகின் தந்தைக்கும் மனத் தாங்கல் ஏற்பட்டு விட்டதாமே... அது நிஜந்தானு ?

யூராக் — அதற்காகவா கவலைப்படுகிறாய்... பதவி விஷயங்களில் பெரியவர்களுக்குள் பொறாமை சகஜந் தானே !

ஷிமேன் — ஆனால் யூராக் ! என் தந்தையின் போக்குச் சரியன்று. உனது தகப்பனார், ஏன், அரசர் ஒருவரால், பெருமைப் படுத்தப்பட்ட ஒருவரை அவமானப்படுத்துவதா !... என் தந்தையின் விபரீதப் போக்கால் என் காதலர் என்னைக் கைவிட்டு விட்டால் !

யூராக் — ஷிமேன் ரொத்ரீக் அப்போர்ப்பட்டவர் அல்லர். மேலும் பெரியவர்களுக்குள் நடந்ததற்கு...

ஷிமேன் — தோன் தியேக் ரோஷமுள்ளவராச்சே... என் தந்தைக்கேதேனும்...

யூராக் — சே...ச்சே தோன் தியேக் கிழவரல்லரோ? அவருக்கா பயப்படுகிறாய் !

ஷிமேன் — அவருக்கு வீரமகன் ரொத்ரீக் இருக்கிறாரே !...

யூராக் — என்னடிப்போ... ரொத்ரீக் உன் காதலர்...உனது கொஞ்சு மொழிகளால் அவரது கோப அனலை அடக்கி விட முடியாதா !

ஷிமேன் — என் வார்த்தைகளுக்கு அவரது நெஞ்சம் கொஞ்சமும் வணங்காது போனால், என் உள்ளம் வெடித்துவிடாதா ? என்னதான் இருந்தாலும், அவர் என் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்தால், அவரை இவ்வுலகம் தூற்றாதா ? அவர்தான் தமது தந்தையின் அவமானத்தைச் சகிப்பாரா ?

யூராக் — ஷிமேன், உன் எண்ணம் போற்றுதற்குரியதே...... இதோபார் நான் வேண்டுமென்றால், அரச சபையில் ஒரு ஒழுங்கு ஏற்படும்வரை, உன் காதலரை, எனது இல்லத்தில் சிறைப்படுத்தி வைத்து அவரது கோபத்தீயை தணித்து விடுகிறேன் இதில் உன் விருப்பந்தடை ஒன்றும் செய்யாதே !...

ஷிமேன் — நேசியே அப்படி இருந்தால் எனக்கு அச்சமே இருக்காது !

யூராக் — நல்லது .. பீட்டர்... ஹே பீட்டர் எங்குச் சென்று விட்டான்... ஷிமேன் இரு இதோ வந்துவிட்டேன்...
(வெளி வாசற்படி வரை சென்று) பீட்டர்... (பீட்டர் ஓடி வருவதைக் கண்டு) அடடே என்னடா இது இப்படி ஓடிவறே.....

பீட்டர் — ஐயோ அம்மாடி எனக்குப் பயமாக இருக்கிறதே...

யூராக் — பகலில் பேயைக் கண்டாயோ ! ஆடவனா நீ! பேடியே

பீட்டர் — ஆடவனு ! ஆண்டவனே கண்டு அஞ்சுவானே அதைக் கண்டால் !...

யூராக் — தன் சிருஷ்டியைக் கண்டாடா ஆண்டவன் அஞ்சுவான் ! போடா போ... நீ உடனே சென்று ரொத்ரீக் ஐயாவை நான் இங்கே அழைப்பதாகச் சொல்லிவிட்டு வா !

பீட்டர் — யாரை ? ரொத்ரீக் ஐயாவையா... அவரையும் கொர்மாஸ் ஐயாவையுங் கண்டுதான் ஆண்டவனும் அஞ்சுவாரென்றேன்.

ஷிமேன் — (இடைமறித்து) என்ன ! என் தந்தையும் ரொத்ரீகுமா...

பீட்டர் — ஆமாம் அவர்கள்...

ஷிமேன் — யூராக் இது என்ன !

யூராக் — பீட்டர், விபரமாக கூறு, உளருதே.

பீட்டர் — நான் உளறவில்லையம்மா... என் உள்ளம் நடுங்குது என் நாக்கு குளறுதே.

யூராக் — ஏன் என்ன நடந்தது ! அவர்கள் இருவரும் என்ன செய்கிருர்கள் ?

பீட்டர் — கோர வாள் யுத்தம் செய்கிருர்கள் நம் அரண்மனை வனத்தில் !

ஷிமேன் — யூராக் நான் நினைத்தபடியே நடக்கிறது பார்த்தாயா... நான் சென்று வருகிறேன்... என்னைத் தடுக்காதே...

(எழுந்து ஓடுகிருள்)

காட்சி—13.

[சோலை 11-வது காட்சி தொடர் - கொர்மாஸும் ரொத்ரீகும் வாள் யுத்தம் செய்து முடிவில் கொர்மாஸ் குத்தப்பட்டு)

தோன் கொர்மாஸ் — ஆ ஹா... அழிந்தது இன்றோடு என் ஆணவமெல்லாம்... அரசரையே அவமதித்த எனக்கு ஆண்டவன் தந்த தண்டனை இதுதான்... ரொத்ரீக் நீயே ஒப்புயர்வற்ற வீரன்... ஆ... உன் தந்தைக்கு உண்மை மகன்... அவரது வஞ்சத்தைத் தீர்த்துவிட்டாய்... ஹா என்னைப்போலொத்த பொருமைபேயன் இவ்வுலகத்திலேயே இருக்கலாகாது ! ஆம்... உனது காதலுக்கு இடைஞ்சலாக நான் இருக்கப்போவதில்லை... இதோ... ஹா... ஆ...

(ஷிமேன் பிரவேசித்தல்)

ஷிமேன்—ஐயய்யோ... தந்தையே... (ரொத்ரீகைக் கண்டு) ஆ!

தோன் கொர்மாஸ்— ரொத்ரீக்...ஷிமேன் என் மகள், அவளைக் கைவிடாதே! ஷிமேன், ஷிமேன் (கொர்மாஸ் இறந்து விடுகிறார். ரொத்ரீக் வாளை உரையில் போட்டுவிட்டுச் சவத்திற்கு தலை குனிந்து மரியாதை செலுத்திவிட்டு சென்றுவிடுகிறான்.)

(ஷிமேன் தன் தந்தையின் பிணத்தின் மீது விழுந்து கதறுகிறாள்)

ஷிமேன் — தந்தையே இதோ இருக்கின்றேன்!... இக்கோர நிலையைக் காண்பதற்கா நான் வளர்ந்து வந்தேன்... அப்பா... ஐயோ தந்தையே... ஆ! அப்பா தாய்க்குப்பின் நீரும் என்னைத் தவிக்கவிட்டீரோ! ஐயோ அப்பா... ஆ இரத்தம், இரத்தம் என் தந்தையின் இரத்தம்... இந்த கஸ்தீய நகரையே இதுகாறும் காத்து வந்த இரத்தம்... வீரசேனாதிபதியின் இரத்தம் இந்நாட்டு மண்ணிலே கரை புரண்டோடுவதா! எதிரியின் கைகளாலல்லாது என் காதலரின் கையாலா உம் உயிர் போனது! போகும் போதும் என்னை அக்கிராதகனிடம் ஒப்படைத்து விட்டுப் போனதா! இரத்தம்! இரத்தம்! இந்த இரத்தம் என் கடமையைச் செய்யச் சொல்லி கட்டளையிடுகிறது! ஆம்! பழிக்குப்பழி, வஞ்சத்திற்கு வஞ்சம்... தந்தையே உம்மைக் கொன்ற அக்கிராதகனின் தலை இந்நாட்டிலேயே உருளவேண்டும்... ஆம்... அரச நீதியில் ஆணையிட்டுக் கேட்பேன் இதனை... இதோ.

காட்சி — 16

[அரசரின் அந்தரங்க அறை — அரசர், அரியாஸ், சான்ஷ், அலோன்ஜ், ஷிமேன், தியேக்]

அரசர் — பெரிய மனிதராய் இருந்தும், கொர்மாஸ் செய்த செய்கை மன்னிக்க முடியாதது!

அரியாஸ் — வாஸ்தவமே... தன் தவற்றை, கொர்மாஸ் இப்போது உணருகிறார் அரசே!

அரசர் — பின்னால் உணர்ந்து யாது பயன்... தோன் தியேக் அவர்களை அவமதித்தது. என் அரசையே அவமதித்ததாகும்... எனது சபையில் அவன் சட்டந் தருவதா! அவன் பெரும் வீரனாய் இருந்தாலென்ன! சேனாதிபதியாய் இருந்தால்தான் என்ன... எனக்கவன் அறிவூட்டுவதில்லை! என் மைந்தனுக்குத் தகுந்த போதகாசிரியரைத் தேர்ந்தெடுப்பது என் பொறுப்பே அல்லாது மற்றவரது அன்று

சான்ஸ் — பதவி ஆசையில் யாவரும் தவறுவது சகஜமே!

அரசர் — அவர்கள் அறிவற்றவர்களே!

சான்ஸ் — அவர்களுக்கு மன்னிப்பளிப்பது அரசரின் கடமையன்றோ?

அரசர் — மன்னிப்பதால் ஒருவருக் கேற்பட்ட அவமானக் கறையை அழித்துவிடமுடியாது...... வீரர் தோன் தியேக், தனது வயோதிக பலக்குறைவால் தயங்கி இருக்கலாம் கொர்மாஸுக்கு நற்பாடங் கற்பிக்காமல். ஆனாலும் பழி தீர்க்குந் தீ என்றென்றும் அணையாது... இது இருக்கட்டும்... நம் நாட்டின்மேல் எதிரிகளின் கண் பார்வை இருந்துகொண்டிருப்பதை நாம் மறக்கலாகாது! எதிரிகளின் கப்பல்கள் சில நம் நதியில் உலாவுவதாக சேதிகள் கிடைக்கின்றன!

அரியாஸ் — உண்மைதான் அரசே! நானுந்தான் கேள்விப் பட்டேன். பலமுறை முறியடிக்கப்பட்டதால் மூர்க்கங்கொண்டு விட்டனர் போலிருக்கிறது! பேடிகள்! நம் படைத் தலைவர் தோன் கொர்மாஸை சரியாக தெரிந்து கொள்ளவில்லை அவர்கள்.

(அலோன்ஜ் வருகை)

அலோன்ஜ் — அரசே... தோன் கொர்மாஸ், ரொத்ரீகால் குத்தப்பட்டு இறந்துகிடக்கிறார் நம்முடைய வனத்திலே.

அரியாஸ், சான்ஸ் — என்ன, என்ன கொர்மாஸா?

அரசர் — இதனை நான் எதிர்பார்த்ததுதான்... இது நிகழும் என்று நான் முன்னரே உங்களுக்கு அறிவித்திருக்கவேண்டியது.

அலோன்ஜ் — கொர்மாஸின் குமாரி ஷிமேன் கண்ணீரும் கம்பலையுமாக உமது சபை நாடி வந்துகொண்டிருக்கிறாள் நியாயங் கேட்க.

அரசர் — படைத் தலைவன் மடிந்ததுபற்றி நான் மிகவும் வருந்துகின்றேன். அவரின் அந்திய குரூர செயல்கள் வியக்கத் தக்கனவே! ஆனால் மடமையால் மதியிழந்து செய்த செய்கை வருந்த தக்கதே!

(ஷீமேன் முன்னும், தோன் தியேக் பின்னுமாக உள்ளே பிரவேசித்தல், அரசர், ஆசனத்தில் அமர மற்றவர்களும் அமர்ந்து கொள்ளுகின்றனர்.)

ஷிமேன் — அரசரே நீதி வேண்டும்! நீதி வேண்டும்! அநியாயமாய் என் தந்தை கொல்லப்பட்டார்.

தோன் தியேக் — அரசே எனது வேண்டுகோளையும் கேட்டருளும்.

ஷிமேன் — அபலை உம் பாதங்களில் நின்று கதறுகின்றேன்.

தோன் தியேக் — கிழவன் நான் உம்முன் மண்டியிடுகின்றேன்.

ஷிமேன் — நான் நியாயங் கேட்கின்றேன்.

தோன் தியேக் — அரசேரே ! அதனை நன்றாய் சீர் தூக்கிப் பார்க்க விரும்புகின்றேன் !

ஷிமேன் —, அரசே ! இவரின் குமாரர்தான் என்னை அனாதையாக்கினார். என் தந்தையைக் கொலை செய்து விட்டார்.

தோன் தியேக் — இல்லை அவன் என் பழியைத் தீர்ந்து விட்டான்.

ஷிமேன் — இரத்தப் பழிக்கு அரசரே ! தீர்ப்புக்கூறவேண்டும்.

தோன் தியேக் — நியாயமான பழித் தீர்ப்புக்கு, நீதியில் தண்டனையில்லையல்லவா ?

அரசர் — இருவரும் எழுந்திருங்கள்... தனித்தனியே முறையிடல் வேண்டும். தோன் தியேக் அவர்களே ! உமது வாதத்தைப் பின்னால் தெரிவியும். முதலில் ஷிமேன் பேசட்டும்... ஷிமேன் உன்நிலைக்கண்டு நான் வருந்துகிறேன் உன் வேண்டுகோள் யாது ?

ஷிமேன் — அரசே – என் உயிருக்குயிரான என் தந்தை மாண்டுவிட்டார். துணை எனக்கெவருமில்லை எனது தந்தையின் இரத்தத்தை என் கண்களால் கண்டேன். இரும்பை ஒத்த விரிந்த அவர் மார்பிலிருந்து வெள்ளமாக ஓடினது அவர் இரத்தம் ! உமது நாட்டைப் பலமுறை பலப்படுத்த உதவின இரத்தம் ! உமது குன்றாப் புகழுக்கு மெருகேற்றி கௌரவந்தந்த இரத்தம் ! உமக்கே சொந்தமும், உரிமையானதுமான இரத்தம் ! உமது நாட்டின் மண்ணிலே, அதுவும் உமது தோட்டத்தின் வாயலிலே, கேவலம் ஒரு ரொத்ரீகால் மண்டை உடைக்கப்பட்டு புழுதியில் ஆறாய் ஓடுகிறதென்றால், ஐயனே என்னால் பொறுக்க முடியவில்லை ! வீரத்தந்தையின் சடலம் குருதியில் உருண்டு கிடந்ததைக் கண்ட என்னால், மற்றதை எடுத்துக்கூற இயலவில்லை. ஆனால், அரசே ! எனது இரத்தக் கண்ணீரும் என் உள்ளத் துடிப்புகளும் மற்றவைகளை உமக்கு எடுத்துரைக்கும் என்று நம்புகின்றேன்.

அரசர் — தைரியங்கொள் மகளே ! இன்று அரசர் உனக்கு தகப்பனாக உதவி அளிப்பார் என்பதை உறுதி அளிக்கின்றேன்.

ஷிமேன் — அரசே ! என் தந்தையின் இரத்தம் மணல் தரையில் குறித்திருந்த என் கடமையைக் கூறுகிறேன் கேளுங்கள்

ஆனால் அரசருக்கு நீதி படிப்பிக்கிறேன் என்ற சீற்றம் வேண்டாம் வீரசேனாதிபதி ஒரு சிறிய ஆண்மகனால் கொல்லப்படுவதா ! தன் தந்தையின் வஞ்சந்தீர்ப்பதற்காக நாட்டிற்கு முக்கியமான ஒருவரைக்கொலை செய்து விடுவதா !... என்ன அநியாயம் ? என் தந்தை இறந்துவிட்டார்... என் வஞ்சந்தீர்க்க அரசரே நீர் பழிக்குப்பழி வாங்கவேண்டும். இரத்தத்திற்கு இரத்தபலியே வேண்டும். அதனை எனக்காகச் செய்யாவிடினும் உமது செங்கோலுக்காகச் செய்யவேண்டும் அரசே !

அரசர் — நல்லது ஷிமேன் ! அப்படி அமர்ந்திரு... தோன் தியேக் அவர்களே நீர் பேசும்.

தோன் தியேக் — ராஜாதி ராஜனே ! பலத்தை இழந்தால் உயிரை இழக்கவேண்டியது தானே ! வீரர்களின் நீண்ட கால ஜீவியம் அவர்களுக்கு விரைவில் அபகீர்த்தியை அனுக வைத்து விடுகிறது ! பலமுறை பல்வேறு வெற்றிகளை இந்நாட்டிற்கு அளித்த நான் இத்தனை காலம் பெருமையுடன் உயிர் வாழ்ந்த நான் ! ! இன்று அவமானக்கறையை அடைந்து வாளா இருப்பதா ! அரசராகிய நீவீர் எனக்கு அளித்த பெருமையைக் கண்டு மனம் சகியாத கொர்மாஸ் உம் அரண்மனையிலேயே, அதுவும் நீவீர் விரைவில் அறிந்து கொள்ளும் விதமாய் என்னை அவமதித்தான்... அறைந்தான். மூப்பின் கேவலப்போக்குடன் அவமானங் குறுக்கிட்டதால் என் கரம், என் வாளை ஏந்த மறுத்தது ! இந்நாட்டிற்குத் தொண்டாற்றி வந்துள்ள இரத்தத்தின் கனியாகிய என் குமாரன், ஏன் இந்நாட்டிற்கும், அரசருக்கும் இனி நற்கியாதி கொண்டுவரும் என் மைந்தன் தன் கரத்தை எனக்கு உதவினான் ! அவன் கொர்மாஸைக் கொன்றான் ! ! என் கண்யத்தைக் காத்தான் ! ! என் உள்ளத்தில் பட்ட அவமானக் கறையைக் கொர்மாஸின் இரத்தத்தில் கழுவினான் ! ! ! கரம்செய்த தவற்றுக்குத் தலையைத்தானே தண்டிக்கவேண்டும். ஆகவே என் நியாயத்திற்குத் தண்டனை யிருப்பின் அது என் தலையில் விழவேண்டும்... ஷிமேன் தன் தந்தையின் கொலைப்பழிக்குப் பலிகேட்டால் என் தலையைத் தருகிறேன் சாந்தியடையட்டும் மானத்தைக் காத்துக் கொண்டபின், நான் மடிவதற்கு வருந்தவில்லை !

(தூதுவன் ஒருவன் வந்து இரகசியம் சொல்ல
மந்திரி மூலம் அறிந்த அரசர்)

அரசர் — அதிமுக்கியத்வம் வாய்ந்ததே ! இவ்வழக்கை விசால விசாரணைக்குப் பின்னரே தீர்ப்புக் கூற இயலும்... நம் நதியில் ஏதோ எதிரிகளின் கப்பல்கள் உலாவுகின்றதாகத் தெரிகிறது ! ...தோன் சான்ஷ்.

தோன் சான்ஷ் — அரசே.

அரசர் — இருளாய்விட்டபடியால், ஷிமேனை அவளது வீட்டில் சேர்த்துவிட்டு வா !...

தோன் சான்ஷ் — அப்படியே அரசே !

அரசர் — தோண் தியேக் அவர்களே ! நீர் தனிமையில் என்னுடன் வாரும். உம்மையும் உமது மகனையும் விசாரிக்கவேண்டும் ; மந்திரி ! ரொத்ரீகை உடனே என்னிடம் அழைத்து வரச் செய்யுங்கள்.

ஷிமேன் — நீதிக்கு மதிப்பளிக்க, கொலை செய்தவரே மடிய வேண்டும் அரசே !

அரசர் — (திரும்பி ஷிமேனைப் பார்த்து) ஆத்திரத்தில் மதியிழக்காதே ஷிமேன். நானே யாவற்றையும் கவனிக்கிறேன் நீ சென்று வா !

காட்சி — 15.

[ரோடு; ஷிமேன் — தோன் சான்ஷும்]

தோன் சான்ஷ் — ஷிமேன் நீ நீதியில் கேட்டவை யாவும் நியாயமே ! பலிக்கு பலிதான்வேண்டும் ! அதிலும் கொன்றவனே கொல்லப்படவேண்டும்... நீயோ வாலிபம் மிகுந்தவள் ! உன் நிலைமையை நினைக்கின் என் உள்ளம் மிகவும் வருந்துகிறது ! உனக்கு நான் என் உதவியைச் செய்யக் கடமைப் பட்டிருக்கிறேன். உன் தந்தையைக் கொன்ற அவ்வயோக்கியனை அழிக்க இதோ என் வாள் இருக்கிறது ! உன் வாய்மலர்ந்து எனக்கு உத்திரவிடு நான் கொன்று போடுகிறேன் அவனை.

ஷிமேன் — சங்கடமான நிலைமை இஃதெனக்கு !

தோன் சான்ஸ் — கலைந்த காதலைச் சீர்படுத்த நான் இருக்கின்றேன், கவலைக்கொள்ளாதே. உன் நெஞ்சங் குளிர நான் வஞ்சந் தீர்த்து விடுகிறேன், சொல் எனக்கு !

ஷிமேன் — என் நியாயத்திற்கு வாக்களித்த அரசரை மீறுவதாகும் உன்னை நான் நாண்டினால் !

தோன் சான்ஷ் — அரச நீதி ஆமை ஓட்டத்தில் போவதை உணரவில்லையோ நீ !... கால தாமதத்தால் குற்றம் மறைந்து போகும், நீதியில் நியாயமிருக்காது !

ஷிமேன் — அப்படி இருந்தால் உன் முடிவிற்கு நான் வர வேண்டியதே !

தோன் சான்ஷ் — சந்தோஷம், அப்படிச்சொல்.

ஷிமேன் — மௌனமாகச் செல்வோம், மனக்கொதிப்பால் என் வாய்மொழிகள் வெளிவர மறுக்கின்றன !

தோன் சான்ஷ் — நல்லது சாந்தி கொள் மன உறுதியடைவதற்கு !

காட்சி — 16.

[ஷிமேன் வீடு — எல்வீர் — ரொத்ரீக் ஷிமேன்]

எல்வீர் — (ரொத்ரீக் வீட்டில் நுழைவதைக் கண்டு) — ஆ ! ரொத்ரீகா !... என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள் ! இங்கு ஏன் வந்தீர் இப்போது ?

ரொத்ரீக் — ஆண்டவனின் ஆணையினால் நடந்த வினையை அறிவிக்கவே வந்தேன் எல்வீர் !

எல்வீர் — இந்த ஆணவம் உமக்கு எங்கிருந்து வந்தது ! ஷிமேனின் தந்தையை நீர் கொல்லவில்லையா ?

ரொத்ரீக் — அவரின் உயிர் எனக்கும் பங்கமளித்தது ! மானங் காத்துக்கொள்ள என் கரம் அவ்வுயிரை மாய்த்து விட்டது !

எல்வீர் — அதற்காக அஞ்சி, இவ்வில்லத்தில் தஞ்சம் புக வந்தீரோ ?

ரொத்ரீக் — ஆம், நியாயத்தை எடுத்துரைப்பது என் காதல் அன்றோ ! எனக்கு நியாயாதிபதி ஷிமேனல்லவோ ! ஆகவே தான் வந்தேன்.

எல்வீர் — அழகில்லை இது ! வெளியே போம் ! ஷிமேனை நீர் காண்பதா !

ரொத்ரீக் — ஆம், அவள் ஆத்திரங்கொண்டிருந்தால் என்னைக் கொல்லட்டும், அதைத்தான் நான் விரும்புவது !

எல்வீர் — ஷிமேன் இங்கில்லை, தன் தந்தையின் ஈமச்சடங்கிற்குப் பின் சொரிந்த கண்ணீருடன், அரச சபைக்குச் சென்றிருக்கிறாள் நியாயம் கேட்க, நீர் சென்றுவிடும் ! உம்மை இங்கே கண்டால் ஊரார் என்ன நினைக்கமாட்டார்கள் ஐயையோ அதோ ஷிமேனும் வருகிறாப் போலிருக்கிறதே ! நீர் சென்றுவிடும்... இதோ வந்து விட்டார்களே ! எனக்காக வேண்டினும் நீங்கள் எங்கேனும் ஒளிந்து கொள்ளுங்கள் போங்கள்...

(ரொத்ரீக் ஒருபுறம் மறைந்து கொள்கிறான், ஷிமேன் உள் நுழைகிறாள், அவளிடம் எல்வீர் ஓடிச்சென்று)

எல்வீர் — அம்மா தனியாகவா வந்தீர்கள் !

ஷிமேன் — இல்லே, தோன் சாஷடமுன் வந்தேன், காமத்தால் மதியிழந்து உளறுகிருன் அவன் என்னிடம்... எல்வீர் ! என் தலே சுழல்கிறது !

எல்வீர் — சாந்தங் கொள்ளுங்கள் ! இதோ இவைகளேச் சாப்பிட்டுவிட்டு உறங்குங்கள் !

ஷிமேன் — உறக்கமா ! என் தந்தையை அநியாயமாய்ப் பறிகொடுத்த எனக்கு உறக்கமா ! அருமைக் காதலரையும் பிரிந்திருக்கும் எனக்கு உறக்கமா ?

எல்வீர் — என்ன உமது தந்தையைக் கொன்றுபோட்ட ரொத்ரீகை இன்னுமா நேசிக்கின்றீர் !

ஷிமேன் — என் மனதார காதலிக்கின்றேன் என்று சொல் ! அவரை என் உள்ளக் கோவிலில் வைத்து பூஜிக்கின்றேன் என்று சொல் ! ஆனுல் அவரையும் இனரேடு நான் இழக்கப் போகிறேன்.

எல்வீர் — ஏன் ! அது எப்படி ?

ஷிமேன் — அரசர் என் தந்தையின் மரணத்திற்காக மிகவும் வருந்துகின்ருர்; ஆகையினுல எனது வஞ்சந் தீர்ப்பதற்காக அரசர், ரொத்ரீகைத் தண்டிப்பது நிச்சயம் ! நிச்சயம் அவர் தலே உருளப்போகிறது ! இதுவரை அரசர் ரொத்ரீகை...

எல்வீர் — என்ன ! ரொத்ரீகிற்கு மரணத் தண்டனே கேட்டுவிட்டீரா ! அவர் உமது காதலர் இல்லேயா ?

ஷிமேன் — என்ன ! என் நேசத் தந்தையைக் கொன்றவர் என் காதலராய் இருப்பதா : கூடாது என் தந்தை அவருடைய பிதாவை அறைந்த ஒரு குற்றத்திற்காக என் தகப்பனுரைக் கொன்று போட்டாரே ! நான் என தந்தையின் உயிருக்கு உயிர் பலிதானே கேட்கவேண்டும்... கேட்டுவிட்டேன்.

எல்வீர் — நீர் கல் நெஞ்சம் கொண்டுவிட்டீரா ! உண்மைக் காதலே உடைத்தெறிய நினேக்காதீர் ! உண்மைக் காதலின் பாதை முள்ளும் முரடும் நிறைந்ததுதானே ! அவைகளின் கஷ்டங்களேயும் வேதனேயென்னும், சோதனேயும் சகித்துச் சென்ருல் தான் சாந்தியடையலாம்... ஆகையினுல் உமக்குச் சாந்தி அளித்து உமது கஷ்டங்கள் யாவையும் பகிர்ந்து கொள்ளும் உமது காதலர் ரொத்ரீகை மன்னித்து விடுவதுதான் நல்லது !

ஷிமேன் — என்ன கொலேக் குற்றத்திற்கு மன்னிப்பா ? அதுவும் வாதியாகிய நான் மன்னிப்பதா !

எல்வீர் — பின் யாது செய்யப் போகிறீர்கள் ?

ஷிமேன் — தந்தையை இழந்த நான் என் காதலையும் இழக்கத்தான் வேண்டும். கடமை என்ற பெருமைக்கேனும் என் காதலரை இழக்கத்தான் போகிறேன்! பின் அவருடன் நானும் மடியப் போகிறேன். இதுவரை ரொத்ரீகை இழுத்து வந்திருப்பார்கள், அரசர் முன்...

(மறைவிலிருந்து ரொத்ரீக் வெளிவந்து)

ரொத்ரீக் — காதலி! இதோ நான் இங்கேதான் இருக்கின்றேன்! வேண்டுமென்றால் நீயே என்னை தூக்குமேடைக்குக் கூட்டிக்கொண்டு போ! வா!

ஷிமேன் — எல்வீர்... நாம் எங்கிருக்கிறோம்... நாம் காண்பதென்ன ? .. ரொத்ரீக் நம் வீட்டிலா ! அதுவும் என் முன்பா ! ..

ரொத்ரீக் — ஷிமேன் கனவன்று நீ காண்பது ! நான் உன் காதலன். எங்கள் மானத்தை மீட்க, உன் தந்தையைக் கொன்ற பாதகன் !

ஷிமேன் — அதிகம் கூறவேண்டாம்... (எல்வீர் நிஷ்கரித்தல்)

ரொத்ரீக் — என் கோரிக்கை ஒன்றை மட்டில் கேள்... உன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள, உன் கடமையை நிறைவேற்ற இதோ இவ்வாளால் நீயே என்னைக் கொன்று போடு...

ஷிமேன் — ஆ! இதென்ன இரத்தக்கறை, என் தந்தையின் இருதயகமலத்தின் ஊடுருவிச்சென்று உறிஞ்சிய இரத்தமா !...

ரொத்ரீக் — ஷிமேன்...

ஷிமேன் — இக்கொடிய வாளை என் பார்வையினின்று அகற்றும் !

ரொத்ரீக் — மாறாக இதனை நன்றாகப் பார்! இதனால் உன் கோப அனல் மூண்டு என் உயிரைப் போகக்கட்டும், நன்றாய்ப் பார் ஷிமேன்! நன்றாய்ப் பார்! ..

ஷிமேன் — இதில் என் இரத்தமேயன்றோ படிந்திருக்கிறது!...

ரொத்ரீக் — ஆம், அந்த இரத்தம் படிந்துள்ள இவ்வாளை நீயே என் உடலில் பாய்த்து என் இரத்தத்தால் அதனைக் கழுவிக் கொள் ! பிடி இதனை !

ஷிமேன் — என்ன கொடுமை, அன்று என் தகப்பனை இவ்வாளினால் கொன்றீர், இன்று இதனை என்னிடம் காட்டியே, என் உயிரைப் போக்கிடுவீர் போலிருக்கிறதே! ரொத்ரீக், முதலில இவ்வாளை அதன் உறையில் போடும்! இல்லையேல் நான் இறப்பேன்,

ரொத்ரீக் — பரிதாபகரமான என் வாழ்க்கையை, என் உயிரைச் சந்தோஷமாய் உன் கரங்களினாலேயே போக்கிக் கொள்ளாமல், இதோ நீ சொல்லியபடி இவ்வாளை உறையில் போட்டு விடுகிறேன். ஆனால் என் கடமையை மட்டில் மறவாதே ஷிமேன்!

ஷிமேன் — கடமை, கடமையை நான் அறிவேன்! உமது கடமையால் உமது தந்தையின் பெருமையை உலகோருக்கு எடுத்துக் காண்பித்து, என் கடமையை நானும் செய்யவேண்டும் என்று தூண்டியதாலேயே நான் நீதியில் மனுச் செய்தேன்.

ரொத்ரீக் — ஆ! நீதியின் ஆக்கினைக்குள்ளாகித் துயருற்று மாளுவதைப் பார்க்கிலும், என்னை உன் மலர்க் கரங்கொண்டு மாய்த்துவிட்டால், மனச்சாந்தியுடன் இறப்பேன் ஷிமேன்! கடமையால் தன் காதலனையே மடித்த வீர மங்கை என்ற நற்பெயரும் கிடைக்கும் உனக்கு. ஆகவே.

ஷிமேன் — காதலரே! நான் நீதியை நம்புகின்றேன். நான் நியாயம் வேண்டினேனே தவிர, உமது உயிரை அழிக்க விரும்பவில்லை.. சென்று வாரும் காதலைக் களைக்கவோ; கடமையை மறக்கவோ மாட்டேன்! தெய்வத்திடம் நம் காதல் வித்தை ஒப்படைக்கின்றேன்.

ரொத்ரீக் — ஆஹா... தெய்வீகக் காதல் இதுதானோ?

ஷிமேன் — தெய்வத்தின் சோதனைதான் இது!

ரொத்ரீக் — சோதனை வேதனை செய்யாமலிருந்தால் அதுவே போதும்!

ஷிமேன் — நீரே எனக்கு வேதனை தருகிறீர்: போம்!

ரொத்ரீக் — நான் சென்று வருகின்றேன். ஆனால் என் உயிரை உன்னிடமே ஒப்படைத்து விட்டுப்போகிறேன்.

ஷிமேன் — சென்று வாரும் ஆனால் உம்மை ஒருவருக்கும் காட்டிக்கொள்ளாமல் வீட்டிற்குப் போய்ச் சேரும். (ரொத்ரீக் செல்ல, எல்வீர் வருவதைக்கண்டு) — என் உள்ளம் தனிமையை நாடுகிறது. எல்வீா நித்திரைக்குப் போ...

காட்சி — 17.

[வீதி — ரொத்ரீகைத் தேடிக்கொண்டு தோன் தியேக் வருதல்]

தோன் தியேக் — இறைவனே! இஃதென் என் மகனைக் காணவில்லையே! மானங் காக்கப்பட்ட சந்தோஷத்தில் என் மனம் பயங்கரக் கவலையில் ஆழ்ந்து விடுகிறதே! சந்தோஷமென்னும்

கடலில் நான் நீந்தும்பொழுது, கவலையென்னும் பயங்கர புயற் காற்று வீசுகிறதே! காதலையே வெறுத்துத் தன் கடமையைச் செய்து முடித்த என் வீர மகனை எங்குத் தேடினும் காண்கிலேனே! இக்காரிருளில் எங்கு மறைந்தானோ — சந்தோஷப் பெருக்கால் அவனை அணைத்து முத்தமிட நாடுகிறது என் மனம்! ஆனால் அதுவே பல சந்தேகங்களையும் கிளப்புகிறதே! மடிந்த சேனாதிபதியின் உறவினர்கள் மடக்கிவிட்டனரோ என் மகனை... என் மகன் உயிர் வாழ்கின்றானா அல்லது சிறையில் வாடுகின்றானா! ஒன்றும் புரியவில்லையே!

காட்சி — 18.

[காடு — ரொத்ரீக் ஓரிடத்தில் அமர்ந்துகொண்டு சோக கீதம் இசைத்துக் கொண்டிருப்பதை செவியுற்ற தோன் தியேக்]

தோன் தியேக் — அதோ என் மகனின் குரல்... ஆம் என்மகன் தான். மகனே ரொத்ரீக், அப்பா உன்னை நான் கண்டேனடா! நான் பாக்கிவான்.

ரொத்ரீக் — நீங்கள் பாக்கியவான்... ஆனால் அடியேன்...

தோன் தியேக் — என் மானங்காத்த யோக்கிவான்? வீர மகனே, என் சந்தோஷத்தைக் கலைக்காதே! என் புகழை ஏற்றுக் கொள்...அறைபட்ட என் கன்னத்தில் உன் மலர்வாய்கொண்டு முத்தமிடு...வா !...

ரொத்ரீக் — தந்தையே! புகழ்மாலை எனக்கு வேண்டாம்... உமது வஞ்சந்தீர்ப்பதற்காக இன்று நான் இரண்டு கொலைகள் செய்து விட்டேன; ஒன்று உமக்கு அவமானமளித்த தோன் கொர்மாஸைக் கொன்றேன். இரண்டாவது என் உயிர்க்காதலைக் கொலை செய்தேன். மூன்றாவதாக நீர் காணப்போவது என் உயிர்... அரச கட்டளையின் கீழ் நாளை, என் தலை உருளப் போகிறது!...

தோன் தியேக் — மோசம் போகாதே!... அரசர் உன் வீரத்தை மிகவும் விரும்புகிறார் அதனை நீ இன்று அவருக்காக — என் இந் நாட்டிற்காக — உதவவேண்டும். அன்பில் மயங்காதே! அஃதோர் அற்பசுகம்!! ஆனால் புகழோ அப்படியில்லை, அது என்றும் அழியாது!!

ரொத்ரீக் — ஆ! என்ன் சொன்னீர்?

தோன் தியேக் — மகனே! நீ தெரிந்துகொள்ள வேண்டியதைக் கூறினேன். இன்று நம் தாய்நாடு எதிரிகளின் கோரப் பார்வையில் சிக்குண்டிருக்கிறது! சில எதிரிகளின் கப்பல்கள் நம் நதியில் உலாவுகின்றனவாம்...

ரொத்ரீக் — ஹா என்ன !

தோன் தியேக் — ஆம், அரசனே மதி கலங்குகின்றன்! பிரஜைகளோ சஞ்சலமடைகின்றனர்... நானே கிழவன்... இந் நாட்டிற்கு இப்போது உதவி செய்ய இயலாத அசக்தன் ! எனக்குப்பின் வந்தவனை இன்று நீ கொன்று போட்டுவிட்டாய்... அவனுக்குப் பிறகு அஞ்சாநெஞ்சம் படைத்தவீரன் உன்னைவிட இந்நாட்டில் எவருமில்லை யென்று அரசரே கூறுகிறுர்... ஆகவே நீயேதான், நம் படையை நடத்திச் செல்லவேண்டுமென்று அரசர் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறுர்... மகனே படையிலுள்ள என் நண்பர்கள் நூற்றுக்கணக்கில் நம் வீட்டிற்கு வந்து விட்டனர் சீற்றத்துடன் என் அவமான நிலைமை அறிந்து ! அவர்களுக்கு நீ தலைமை தாங்கிச்செல்வதால் ஆனந்தங் கொள்வார்கள். உனக்கும் மிகப் பெருமை ! அவ்வீரர்களின் தீரமிக்க கரங்கள் கட்டாயம் எதிரிகளின் உதிரத்தை ஊற்றுக ஓடச்செய்யும். சந்தர்ப்பத்தை இழக்காதே, வெற்றியுடன் திரும்பினுல் அரசரின் அன்பை அடைவாய் ! உனது வீரிய வெற்றியால் ஷிமேனின் காதலைத் திரும்பவும் பெறுவாய்... கொலைக்குற்றத்திற்காக அரசக்கட்டளையின் கீழ் உன்தலை உருளுமே என்று வெட்கங்கொண்டால் போர்க்களத்தில் தர்ம யுத்தம் புரிந்து வெற்றியுடன் உன் உயிரை விடு ! வா என்னுடன்.

ரொத்ரீக் — ஆம் கலங்கிய என் மனமும் போரில் தெளிவுறும். இதோ நான் தயார்...

இடைவேளை.

காட்சி — 19.

[போர்முடிவில் சில காட்சிகள் — போர் வீரர்களின் களியாட்டங்கள் பிரஜைகளின் குதூகலம், மற்றும் சமயோசிதம்]

காட்சி — 20.

[ஷிமேனின் வீடு — எல்வீர், ஷிமேன், யூராக்]

ஷிமேன் — எல்வீர் நீ கூறியவைகள் யாவும் பொய் வதந்திகள் அல்லவே !

எல்வீர் — அம்மா இந்நாட்டு மக்கள் ரொத்ரீகை வானளாவப் புகழ்வதைக் கேட்டால் நீங்களும் நம்பத்தான் மாட்டீர்கள் ! மூன்றேமணி நேரப்போரில் எதிரிகள் ஆயிரம் பேரும் இருந்த இடமே தெரியாது சிதறிவிட்டனராம் ! வீரர் ரொத்ரீகின் தீரச் செயலுக்கு அடையாளமாக எதிரி அரசர் இருவர்களைக் கைதியாக்கிக்கொண்டு வந்திருக்கின்றனர் !...

ஷிமேன் — புதுமைகளையல்லவா செய்கின்றன, ரொத்ரீகின் கரங்கள்! ஆமாம் எல்வீர் அவருக்குக் காயங்கள் ஒன்றும் ஏற்படவில்லையே! நீ அவரைப் பார்த்தாயா?

எல்வீர் — என்ன இதற்குள் உமது முகம் கருகிவிட்டதே... அதைப்பற்றி நான் ஒன்றும் கேள்விப்படவில்லையம்மா!

ஷிமேன் — இம். தீயினிடத்தில், விட்டில் பூச்சிகள் என்ன செய்திட முடியும்... வீரராய்த் திகழும் என் காதலர், என் தந்தையைக் கொன்ற பாதகராய் இருக்கிறாரே எனக்கு!

[அரசகுமாரி யூராக் வருகை]

எல்வீர் — அம்மா, அதோ அரசகுமாரி வருகிறார்கள்! நான் வருகிறேன்.

யூராக் — ஷீமேன் நான் இங்கு வந்தது உன் சஞ்சலத்தைத் தீர்க்க அன்று... மாறாக உனது துக்கத்தில் நானும் பங்கு கொள்ளவே!

ஷிமேன் — அரசிளங்குமாரியாகிய நீ இப்பேரானந்த நாளில் என்னுடன் துக்கங்கொள்வது சரியன்று!... ரொத்ரீக் இந் நாட்டிற்கும் தனது அரசருக்கும் புரிந்திருக்கும் வீரத்தொண்டு, வீரவெற்றி இவைகளுக்கு இந்நாடே, ஏன் உலகமே, போற்றுவதும், வெற்றிவிழாக் கொண்டாடுவதும் மிகத்தகும்! இப்பெரும் விழாவில் பங்கு பெறமுடியாதிருக்கும் பாவி, நான் ஒருத்தியே!

யூராக் — ஷிமேன் உனது தந்தையே உயிர்பெற்று வந்தாற் போல இருக்கிறது ரொத்ரீகின் செயல்கள்! உண்மையில் புதுமைகளைச் செய்கின்றன, அவரது கரங்கள்!! கைதியான அரசர்கள் இருவரும் ஒருமனதாய்ப் புகழ்கின்றனர், என் தந்தையும் மகிழ்கின்றார!

ஷிமேன் — யார் புகழ்ந்திடினும், யார் மகிழ்ந்திடினும், நான் ரொத்ரீகை இகழத்தான் செய்கின்றேன், அவர் எனக்குத் துரோகம் செய்தவர்; என் மனதை உடைத்த கிராதகர்! என் தந்தையின் வஞ்சந் தீர்க்க அரச சபையில் மறுமுறையும் அக் கிராதகன் உயிரைக் கேட்டே தீருவேன்,

யூராக் — ஷிமேன், பதறாதே! நீ முடிவுசெய்த காரியம் சரியன்று நான் சொல்வதைக் கேள் — நம் நாட்டிற்கே உயிரளித்த உன் காதலரின் உயிரை நீ கேட்பதா! உன் தந்தைக்குப் பதில் இன்று ரொத்ரீக் தானே நம் போர்வீரர்களுக்குத் தலைவராக வேண்டும்! இந்நாட்டுப் பிரஜைகளுக்கே மிகவும் முக்கியமான ஒருவரை நீ வஞ்சிக்கலாகாது! அவர் உயிரை நீ போக்கக் கருதுவது இந்

நாட்டின் மக்கள் அனைவரின் உயிரைப் போக்க நினைப்பதாகும் வேண்டுமென்றால், ரொத்ரீகின் மீது, கொண்டுள்ள காதலை அழித்துவிட்டு, அவர் உயிரை இந்நாட்டிற்கு அளி, இதுவே என் வேண்டுகோள்...

ஷிமேன் — பழிக்குப் பழி வாங்காவிட்டால், என் தந்தையின் ஆன்மா சாந்தி அடையாது! நீதியின் முன்பு நான் நியாயங் கேட்டே தீருவேன்!

யூராக் — நியாயத்திற்கு இத்தருணத்தில், அரச நீதி தணிந்தே போகும்.

ஷிமேன் — அரசர் இதனை மறுக்கலாம்... ஆனால் நான் சும்மா இருக்க இயலாது! கொலைஞனுக்கு கொலைத் தண்டனைத்தானே சரி நீதி எவருக்கும் போது!

யூராக் — ஆம்... உன் காதலரை நீ இழக்கத்தான் ஆசிக்கிறாயா! இழந்தபின் உனக்கு கிடைக்கும் லாபம் என்ன, பின்னால் நீ ஏது செய்வாய்!

ஷிமேன் — அவருக்கு மரணத் தண்டனை கேட்டபின், என் உயிருக்கு நானே தண்டனை அளித்துக் கொள்வதென்பதே என் முடிவு!

யூராக் — என்ன தற்கொலையா! நம் நாட்டு நாரிமணிகள் செய்யும் செயலா அது: என்னே உன் பிரதிக்கினை. உன் அழிவிற்குப் பிறகும் அல்லவா இழிவைத் தேடிக்கொள்வாய்! பெண்குலத்திற்கே பெரும் அவமானத்தை நீ உண்டு பண்ணுவாய்.. மேலும் தற்கொலை மாபாவச்செயல்! அதனைத் தெய்வமும் வெறுக்கும் ஷிமேன், உன் மனதை மேலும் நான் கலக்க விரும்பவில்லை! தனிமையில் நன்றாய் நீ யோசித்துப்பார் நான் போய் வருகிறேன்.

காட்சி — 21.

[வீதி யூராக் தன் மனசாக்ஷியின் கட்டளைக்குப் பணிகின்றாள்]

யூராக் — ஷிமேன் ரொத்ரீகை வெறுத்துப் பேசுவதெல்லாம் அணைந்த என் காதற்தீயை யல்லவா மூட்டி விடுகின்றன... ஷிமேன், ரொத்ரீகை அன்புடன் நேசித்தவற் இவ்வூராரின் இழிச் சொல்லுக்கஞ்சியே, அவரை வெறுப்பவள்போல் நடிக்கின்றாள், என்னிடமும் வெளிக்காட்ட வெட்கப்படுகின்றாள் என்பதை அவளுடைய பெருமூச்சுகளாலும், உள்ளங் குமுறுவதாலும், பேச்சின் தடங்கலாலும் நான் அறிகிறேன். அறிந்தும்

நான் காமக்குருடி... ரொத்ரீகை நான் இச்சித்தால் இவ்வுலகமே என்னை இகழாதா! ஷிமேன் என் ஆருயிர் சிநேகி, அவள் ரொத்ரீகின்பால் கொண்டுள்ளது உண்மைக் காதல், தெய்வமும் விரும்பும் காதல்! உண்மைக் காதலில் ஈடுபட்டோருக்கு இவ் விதச் சங்கட சோதனைகள் நிகழ்வது சகஜமாய்ப்போய் விட்டது! என் காதல் போயிற்றே என்று நான் வருந்தவில்லை. காதலின் றேல் சாதல் வேண்டும், அல்லது சந்நியாசங் கொள்ளவேண்டும் என்ற எண்ணமும் என்னிடமில்லை! என்றால் பல ஜீவன்கள் பிறப்பது கடவுள் சித்தமாயிருந்தால் அதன்படி நான் எவனை யேனும் மணப்பேன்... இனி ஷிமேனின் கருத்துகளில் தலையிடேன்.

காட்சி — 22.

[அரண்மனைத் தர்பார் கூடியிருக்கிறது — அரசர், பிரதானிகள். ரொத்ரீக், தோன் தியேக், யூராக், தன் தம்பி, பிரஜைகள், சான்ஷ், அரியாஸ், அலோன்ஜ்]

அரசர் — நேய பிரதானிகளே! பிரஜைகளே! இன்று நம் தாய் நாடு அடைந்திருக்கும் வெற்றிக்கும், நிம்மதிக்கும் காரணம் நமது இளம் வீரன் ரொத்ரீகின் தீரமே! அவனுக்கும் மற்றைய வீரர்களுக்கும், அச்சமின்மையும், அறிவும் ஆற்றலும் அளித்தது இறைவனேயன்றி மற்றெவருமில்லை! ஆகவே முதலில் ஈசனுக்கு நமது நன்றியைச் சர்ப்பிப்போமாக! (யாவரும் எழுந்து நின்று மௌனம் சாதித்தல்)

அரசர் — எனது! மக்களே! இரண்டு நாட்களுக்கு முன்னர் நம் நாடு இருந்த நிலைமை நீங்கள் அறிந்ததே! எதிரி களின் திடீர் வருகையை உணர்ந்த எத்தனையோ குடும்பங்கள் பீதியடைந்து என் அரண்மனையிலேயே குடி புகுந்தன. ஏன் நமது படைகளுமே அஞ்சின! நானும் படைத்தலைவன் ஒருவன் இல்லையே என்று பயந்தேன்! ஆனால் நமது சில வீரர்களைக் கொண்ட ஒரு சிறிய படையை அழைத்துச்சென்று எதிரிகளை மருட்டி விரட்டி அடித்தபின்னர், இரண்டு எதிரி அரசர்களையும் கைதியாக்கி வெற்றியுடன் திரும்பி நம் யாவருக்கும் சாந்தி அளித்த இளம் வீரன், தோன் தியேக் அவர்களின் புதல்வன் தோன் ரொத்ரீகே! அவனது வீரதீரத்தை இந்நாடு என்றும் மறவாது! ரொத்ரீக் போர் புரிந்த தந்திரத் திறமையைக் கைதி யான அரசர்கள் இருவரும் மெச்சிப் புகழ்ந்ததை என் காதாரக்

கேட்டுக் களிப்புற்றேன்! ரொத்ரீக் இங்கேவா!... நீ இப்பால்ய வயதில் இந்நாட்டிற்கே வெற்றியளித்து, அழியாப் புகழைத் தேடிக் கொண்டது பற்றி மகிழ்கின்றேன்; உன் வீரப் பராக் கிரமத்தால் எதிரிகளைத் திணற வைத்துள்ளாய்! இதனைக் கைதி யான அரசர்கள் இருவரும் ஒப்புக்கொண்டு வெற்றிவீரன் என்று பொருள்படும், அவர்களது பாஷையில் "LE - CID" லெ ஸீத் என்ற பார்புகழ் பெயரை அளிக்கவும் ஆசிக்கின்றனர். ஆகவே, ரொத்ரீக், இன்று முதல் லெ ஸித் என்றே அழைக்கப்படுவார்!

பிரஜைகள் — லெ ஸீத் வாழ்க! அவரது புகழ் ஓங்குக!

படை வீரர்கள், பிரதானிகள் — சேனாதிபதி லெ ஸீத் வாழ்க! வெற்றி வீரரே! வாழ்க — வாழ்க!

ரொத்ரீக் — மாட்சிமை மிகுந்த மன்னருக்கும். மாபெருங் கூட்டமாய் இங்குத்திரண்டு வந்திருந்து, என்னை வானளாவ கௌர விக்கும் உங்கள் யாவருக்கும் என் மனமார்ந்த வணக்கத்தையும், நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்! பயன் நோக்காது கடமையைச் செய்வதே என் வாழ்க்கையின் இலட்சியம்! மேலும் ஒற்றுமை வலிமை தரும் என்ற நம்பிக்கையே என் வெற்றிக்கு மூலகாரணம், ஆம் நான் என்னுடன் அழைத்துச் சென்ற சைன்யம் நூறு பேர்களைக்கொண்ட சிறிய படைதான்! பெரும் பலம் பொருந்திய எதிரிகளை முறியடிக்க என் தந்திரக் கட்டளைகள் யாவையும் ஒரு மனதாய் நம் சைனியம் நிறைவேற் றினதாலும், படையில் சேர்ந்திராத நம் பிரஜைகள் பலரும் ஒரு முகமாய் எதிரிகளைத் தாக்க இருந்த நிலைமையுமே, எதிரிகளை மிரண்டோடச் செய்தன! நமக்கு வெற்றியும் தந்தது! ஆகவே ஒற்றுமை எத்தேசத்திலுள்ளதோ அங்கே அபஜெயமென்பதே இருக்காது என்பது நிச்சயம்... அஞ்சா நெஞ்சமும், தளரா வீரமும், விடாமுயற்சியும், நன்னம்பிக்கையுமே படைகளுக்கெல்லாம் பெரும் பலந்தருவது! ஒற்றுமையோ அவைகளிலும் பெரிது. ஒற்றுமை குலைந்த நாட்டின் பேரில்தான் மாற்றானின் கண்ணோட்டம் என்றும் இருந்துகொண்டிருக்கும்! ஆதலால் நாமே நமக்குள் ஒற்றுமையைக் குலைத்துக் கொள்ளாதிருக்கவேண்டும். ஜாதி வேற்றுமையை ஒழிக்கவேண்டும். எல்லோரும் சமத்துவமாக வாழவேண்டும். இதனால் நம் வலிமையை ஸ்திரப்படுத்தவேண்டும். இதுவே என் சிறிய புத்திக்கெட்டிய எளிய கருத்து. இதனை நீங்கள் ஒழுங்குடன் அநுசரித்து நடந்து வந்தால் நானும் என் சேவையை ஒழுங்குடன் புரிந்து மன்னர் மனதிற்கும் சாந்தி அளிக்க முடியும்...

பிரஜைகள், படைவீரர்கள் — ஜே ! வெற்றி வீரர் "லெஸீத்" வாழ்க ! லெ ஸீத் வாழ்க !

யூராக் — (எழுந்து நின்று தனிப்பட்ட குரலில்) ரொத்ரீகின் காதலி ஷிமேனும் வாழ்க !

அரசர் — உண்மையே ! மறந்துவிட்டேன் ! நமது வெற்றி விழாவைக் கொண்டாடுமுன், ரொத்ரீகின் காதலி ஷிமேனை சாந்தப்படுத்தல் வேண்டும்...... மந்திரி, உடனே ஷிமேனை அழைத்துவர உத்திரவிடு...

மந்திரி — சிப்பாய் உடனே ஆகட்டும்.

காட்சி — 23.

[வீதி — ஷிமேன் தன் மனப் போராட்டத்தோடு நடத்து வந்து கொண்டிருக்கிருள்]

ஷிமேன் — நாமொன்று நினைக்கின் தெய்வமொன்று நினைக்கின்றது ! இன்று ரொத்ரீக் பெற்றிருக்கும் பெருமையில், அரசர் என் வழக்கை ரத்து செய்துவிடுவார் போலிருக்கிறதே !... அவரைச் சிரச்சேதம் செய்யாவிட்டாலும், அவர் மனதை சித்திர வதை செய்யவேண்டும்... ஏன் தோன் சான்ஷும் ஒரு வீரன் தானே ! அவனும் அன்று என்னை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டுச் சென்றதிலிருந்து, அடிக்கடி, என்னை நேசிப்பதாக காதற்கடிதங்கள் கணக்கின்றி எழுதுகின்ருன் ! ரொத்ரீகின் சிரசையும் கொண்டுவருவதாகவும் உறுதி அளிக்கின்ருன்... ஆகவே இதனையேனும் அரசரிடம் முறையீடுவோம்...

சேவகன் — அம்மா சற்று நில்லுங்கள்... முதலில் உம் வருகையை நான் அரசரிடம் சென்று அறிவித்து வருகிறேன்.

காட்சி — 24.

[அரண்மனை — 22-வது காட்சியின் தொடர்]

சேவகன் — அரசே. ஷிமேனம்மாள் வந்திருக்கிருர்கள் வெளியே !

அரசர் — வரச்சொல்... அன்பர்களே ! ஷிமேன் தன் தந்தையின் பழி தீர்ப்பதற்காக உண்மையில் தன் காதலனைப் பலியாக்க விரும்பவில்லை. உள்ளூர ரொத்ரீகை அவள் நேசிப்பதாயும், ரொத்ரீகிற்குப்பின் அவள் உயிர் வாழமுடியாதென்றும், என் மகள் யூராக்கிடம் சொல்லியிருக்கிருளாம்... ஆகவே ஷிமேனை

நான் சோதிக்க விரும்புகிறேன்! ஆகையினால் ரொத்ரீக் நீ எழுந்துசென்று அந்த அறையில் மறைந்திரு!... பிரதானிகளே! நீங்கள் எல்லோரும் இப்போது துக்கமாக இருப்பதுபோல் நடிக்கவேண்டும்... (ஷிமேன் உள்ளே வருவது கண்டு)

அரசர் — வா ஷிமேன் வா... இனியாகிலும் நீ சந்தோஷமாக இரு! உனக்கு விரோதியான ரொத்ரீகிற்கு கடவுள்தானே, தண்டனை கொடுத்துவிட்டார்... போர் முடிவில் உன் காதலன் ரொத்ரீக் பகைவர்களின் கையில் சிக்குண்டு மாண்டுபோனதாக இப்போது தான் விபரமறிந்து நாங்கள் வருந்துகின்றோம்.

ஷிமேன் — என்ன! ரொத்ரீக் மாண்டுபோனாரா... ஐயோ நான் கேள்வியுற்றதெல்லாம் பொய்யா?

அரசர் — ஆம்! ரொத்ரீக் இறந்தபின்னர், அவனது தந்தை தோன் தியேக் அவர்களே, போரைத் தொடர்ந்து நடத்தி ஜெயம் பெற்று, ரொத்ரீகின் கவச உடைகளை அணிந்து கொண்டு வந்து எங்கள் எல்லோரையும் ஏமாற்றிவிட்டார்.

ஷிமேன் — ஐயோ! என் தந்தைக்குப்பின் என் காதலரும் இறந்தாரா! ஈசனே இனி என் கதி என்ன ஆவது... அரசே நீர்தான் என்னைக் காத்திடவேண்டும்...

அரசர் — ஷிமேன், சித்தம் தளராதே.. உனது காதலின் உண்மை நிலையை நாங்கள் யாவரும் தெரிந்துகொண்டோம். உண்மைக் காதலர்களுக்கு இறைவன் என்றுமே இடைஞ்சல் செய்யமாட்டார். உனது ரொத்ரீக் உண்மையில் உயிருடனிருக்கின்றான்! ஆனால் பெயரில் மாறிவிட்டான். உன் காதலன் சாதாரண குதிரை வீரன் அல்ல, அவன் இப்போது **லெ ஸித் "வெற்றி வீரன்"** அவனே உனக்கு ஏற்ற மணாளன். உங்கள் திருமணத்தை நாங்கள் யாவரும் ஒருமனதாக விரும்புகின்றோம்.

பிரதானிகள், பிரஜைகள் — ஆம்... ஆம்... ரொத்ரீக் - ஷிமேன் வாழ்க!

ஷிமேன் — கதைகளைச் சொல்லி என் கடமையை மறக்கடிக்க முடியாது! என் தந்தையின் உயிரைப் போக்கிய ஒருவரை நான் விரும்பவும் முடியாது... பதிலுக்கு அவர் உயிர் எனக்கு வேண்டும்... அவர் சாகவேண்டும் என் தந்தைக்குப் பதில்!

அரசர் — மகளே, கோபம் வேண்டாம், கோபம் மாபாவம்! அதிலும் பகைமை கொள்வது மிகக் கொடுமை, நன்றாய் யோசித்துப் பார்!

ஷிமேன் — அரசே... தங்களுக்காக வேண்டிச் சொல்கிறேன்! தாங்களே என் எதிரியை கொலைச் செய்யச் சொல்ல விருப்ப மில்லாவிட்டாலும் நான் விரும்பும் ஒன்றுக்கேனும் இடந்தாரும்!

அரசர் — என்ன அது, கேள்!

ஷிமேன் — என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள, நான் இச் சபையில் வீற்றிருக்கும் போர் வீரர்களில் ஒருவரை ரொத்ரீகிற்கு எதிரியாக வாள் யுத்தம் செய்ய முன்வரவேண்டுகிறேன்.

அரசர் — பழங்கால வழக்கங்கள் என் காலத்தில் வேண் டாம். வெற்றி வீரனை திகழ்ந்த ஒருவனைக் கேவலம் ஒரு வாள் யுத்தத்திற்கு நிறுத்த விரும்பவில்லை நான்!

தோன் தியேக் — அரசே! மோசம் போகாதீர்... என் மைந் தன் பால் கொண்டுள்ள பாசத்தால், நீதி தவற வேண்டாம் நீங்கள். உமது பிரஜைகள் என்ன சொல்வார்கள், ஷிமேன் விரும்பியதை அங்கிகரித்துக் கொள்ளுங்கள்.

அரசர் — நீர் சொல்வதற்கு வேண்டுமாயின் நான் உடன் படு கிறேன்... ஷிமேன் இங்கிருக்கும் வீரர்களில் ஒருவனை நீயே தேர்ந்தெடு! பின்பு என்னிடம் வந்து வம்பு செய்யாதே!

தோன் சான்ஸ் — அரசே, ஷிமேனுக்காக நான் பணியாற்ற விரும்புகின்றேன்.

அரசர் — ஷிமேன், உன் விருப்பம் யாது!

ஷிமேன் — நான் கேட்டதற்கு இனி மாறுதல் சொல்வதற் கில்லை!

அரசர் — சரி, மந்திரி, நாளை உதயத்திற்குள் இதற்கான ஏற் பாடுகளை செய்து நீரே இவர்கள் யுத்தத்தின் நியாயமான முடிவை என்னிடம் வந்து தெரிவிக்கவேண்டும். ஷிமேன் உனக் கொரு நிபந்தனை. உனக்காகவே ஏற்படுத்தப்படும் இவ் வாள் யுத்தத்தில் யார் ஜெயம் பெறுகின்றனரோ அவரையே நீ மண முடித்துக் கொள்ளவேண்டும் தெரிகிறதா!

ஷிமேன் — ஐயனே! ஏதற்காக் இக்கடின உத்தரவு!

அரசர் — ஆம்! இதுவே என் கட்டளை! இதுவே என் முடிவு!

காட்சி — 25.

[வனம் — சான்ஸ், பீட்டர், அலோன்ஜ்]

தோன் சான்ஸ் — ஹே பீட்டர் இங்கே வா!

பீட்டர் — யாரையா அது அதிகாரத்துடன் அழைப்பது !... ஓகோ... நீங்களா ! நான், வேறு யாரோ காட்டான் என்றல்லவா நினைத்துக்கொண்டேன்... ஆமாம்... நீங்கள் தானே நாளைக்கு ரொத்ரீக் ஐயாக்கூட...

தோஸ் சான்ஷ் — ஆமாமடா. அது. இருக்கட்டும் நீ எங்கே போய்க்கொண்டிருக்கிருய் ?

பீட்டர் — நானு ! நான் இருக்கட்டும். ஏனையா, உங்களால் அவருடன் கத்திச்சண்டையில் ஜெயிக்க முடியுமா !

தோன் சான்ஷ் — பீட்டர், அதற்காகத்தான் நீ ஒரு காரியம் செய்தாக வேண்டும் !

பீட்டர் — நானு ! என்னையா அது ! அவருடன் என்னைச் சண்டைச்செய்யச் சொல்கிறீரா ! அதுதான் முடியாது ! கத்தியை எடுத்தால், புத்தியே என்னிடம் இருக்காது ! அப்புறம் என்ன ஆகுமோ ! ஆமாம்.

தோன் சான்ஷ் — (சிரித்துக்கொண்டு) அப்படியெல்லாம் ஒன்றுமில்லே, நீ இப்போது எங்கே போகிருய் ?

பீட்டர் — நானு ? நான் ஷிமேனம்மாள் வீட்டிற்குப் போகிறேன் !

தோன்சான்ஷ் — அப்படியா ! பழம் நழுவிப் பாலில் விழுந்து விட்டது !

பீட்டர் — என்ன விழுந்துவிட்டதா ! அப்படின்னு அந்தப் பழத்தை எடுத்து என் வாயில் போட்டுவிடுங்களேன் ! ஆ ! (வாயைத் திறந்து கொள்ளுகிருன்)

தோன்சான்ஷ் — ஹஹஹா நல்ல விகடனப்பா நீ, இந்தா இந்த நோட்டுகளை உன் பையில் போட்டுக்கொள்.

பீட்டர் — ஹேன்... என்னங்... வேண்டாங்க நீங்க வைத்துகுங்கோ !

தோன்சான்ஷ் — கைக்கு எட்டும்போது பிடித்துக் கொள்ளாமல் இருக்கலாமா ! இந்தா பிடி !

பீட்டர் — நான் கையை நீட்டி வாங்கிறதில்லேங்க ! என் பையை வேண்டுமன்னு காட்டுகிறேன்; போடுங்கோ.

தோன்சான்ஷ் — நல்ல கௌரவந்தான் இந்தா... பீட்டர் இதோ பார் ஷிமேனம்மாள் வீட்டிற்குச் சென்ருல் அவளை உன் எஜமானி அழைப்பதாகச் சொல்லி இங்கே கூட்டிக்கொண்டு வர உன்ஞல் முடியுமா ?

பீட்டர் — என்னையா... ?

தோன்சான்ஷ் — அவளைக் கூட்டிக்கொண்டு வந்து விட்டாயானால் நான் உனக்கு இதைவிட பெருத்த வெகுமதி அளிப்பேன் தெரிகிறதா !

பீட்டர் — நிறுத்துங்கய்யா சரிதான்.. நான் கூட்டிக்கொடுக்கும் காமாட்டி என்று நினைத்துக் கொண்டீர் ! இதற்குத்தான் நோட்டுகளோ ! இந்தாரும் உம் வெகுமதி ! (எறிந்துவிட்டுச்செல்கிறான்)

தோன்சான்ஷ் — அவன் கெட்டான் மடையன் என் மங்கை ஷிமேன் என் மார்பிலேயே இருக்கும்போது... (ஷிமேன் உருவப் படத்தை எடுத்துக்கொண்டு) ஆஹா உன்னை நான் அடையாமலா போகப்போகிறேன்... (பாட்டு ஒன்றை, இசைக்கின்றான் அவ்வழியே அலோன்ஜ் வருகிறான்)

அலோன்ஜ் — டேய்... என்னடா அது அர்த்த ராத்திரியில் பாட்டு ? கையில் என்னடா படம் ?

தோன்சான்ஷ் — ஓ ஹோ ஹோ ரொத்ரீக் என்னை மன்னிக்க வேண்டும்...

அலோன்ஜ் — ஆ ஹா ஹா என்னடா உளறுகிறாய் வீரசிங்கமே !

தோன்சான்ஷ் — ஓ ! அலோன்ஜா ! ரொத்ரீக் என்றல்லவா நினைத்துக்கொண்டேன்.

அலோன்ஜ் — என்னடா, சான்ஷ் ! நீயா நாளை ரொத்ரீக்குடன் வாள் யுத்தம் செய்யப்போகிறாய்... அரச சபையிலே வீரமாய்ப் பேசிவிட்டாயே !

தோன்சான்ஷ் — என்னடா செய்வது ! பெண் என்றால் எதையும் சாதிக்கத்தானே வேண்டியிருக்கிறது ! ஷிமேனின் அங்க அழகே என்னை அனைத்தும் செய்யத் தூண்டுகிறது ! அவளை நான் எப்படியும் அடையவேண்டுமே ! என்மீது அன்பில்லாமலா ஷிமேன் இன்று அரச சபையில் மறைமுகமாய் என்னைத் தூண்டினாள் வாள் யுத்தத்திற்கு !

அலோன்ஜ் — ஷிமேன், ரொத்ரீகை எவ்வளவு வெறுத்தாலும் ரொத்ரீக் அவளை அன்புடன்தான் நேசிப்பான், என்பதை மறந்து விடாதே ... மேலும் ரொத்ரீக் ஓர் ஒப்புயர்வற்ற வெற்றி வீரனுச்சே ! அவனுடன் நீ யுத்தம் செய்வதென்றால் எனக்கென்னமோ நம்பிக்கையில்லை. ஆகையினால் நீ... (இரகசியம் சொல்லல்)

தோன்சான்ஷ் — (ஆனந்தமேலிட்டால் பாடுகிருன். இருவரும் இன்ப கீதம் பாடிக்கொண்டே செல்கின்றனர்.)

காட்சி — 26.

[ஷிமேனின் வீடு, படுக்கை அறை — ஷிமேன், எல்வீர், சான்ஷ், அரசர், தியேக்]

ஷிமேன் தன் நிலேயை நினேந்து சோக கீதம் பாடிக்கொண்டிருக்கிருள்; எல்வீர் உள்ளே வந்து...

எல்வீர் — என்னம்மா சின்னம்மா இன்னுமா நீர் தூங்கவில்லே ?

ஷிமேன் — தூக்கமா மாபாவியாகிய எனக்குத் தூக்கமா! பெண்ணுய் பிறந்த என்னுல் அல்லவா நாளே இரண்டு வாலிப யுவர்கள் கையில் வாளேந்தி வலிய சண்டை செய்யப் போகின்றனர் !

எல்வீர் — தோன்சான்ஷ பொல்லா முரடனுச்சே !

ஷிமேன் — ஆமாம்... அவன்... ரோத்ரீகை கொன்று போட்டு விட்டால் என் கதி என்ன ஆவது ! என் தந்தையின் வஞ்சம் போக்க மற்ருருவன் என் காதலரின் உயிரைமாய்ப்பதா ! பிறகு அரச கட்டளேயின்படி, என் மனம் விரும்பாத மற்ருரு கொலேஞனே நான் மணப்பதா ! .. ரொத்ரீக் என் தந்தையைக் கொன்றவர் என்று தானே அவரை நான் மறுத்தேன், அவரையும் வெறுக்கின்றேன்... நாளே... தோன்சான்ஷ்...

(திடீரென்று தோன்சான்ஷ் உள்ளே பிரவேசித்து)

தோன்சான்ஷ் — ஷிமேன்... இதோ நீ விரும்பிய இவ்வாளேப் பெற்றுக்கொள் !

எல்வீர் — ஆ தோன் சான்ஷ் !

ஷிமேன் — நீயா ! இவ்விருளில் இங்கு ஏன் வந்தாய் !...

தோன்சான்ஷ் — இவ்வாளே உன்னிடம் சமர்ப்பித்து உன் அன்பைப்பெறவே !

ஷிமேன் — இது ரொத்ரீகின் வாளல்லவா ?

தோன்சான்ஷ் — ஆம் ! இதோபார் (உருவிக் காட்டுகிருன்)

ஷிமேன் — ஆ ! இதென்ன இரத்தக் கறை !...என் காதலர் ரொத்ரீகின் இரத்தமா இது ! அட பாதகா ! அவரைக் கொன்று போட்டு விட்டாயா !

எல்வீர் — அட பாவி சண்டாள...

தோன்சான்ஷ் — விபரத்தைக் கூறுகிறேன் கேள் ஷிமேன் !...

ஷிமேன் — விபரம் அவசியமில்லை எனக்கு ! நீ ஒரு காமக் கிராதகன் உனக்கு எதிரியான, என் காதலரைக் கொலை செய்து விட்டாய் ! இந்நாட்டிற்கே பெருமை தேடித்தந்த ஒருவர் உயிரை உன் வஞ்சனையினால் அநியாயமாய்ப் போக்கி விட்டாய் என் மீது கொண்ட காம இச்சையினால், ரொத்ரீக் அயர்ந்திருக்கும் தருணம், பேடித்தனமாய் அவரைக் கொன்று போட்டுவிட்டு வந்திருக்கிறாய்.. இது தானே உன் விபரம் ! காமக் கொலைஞனே ! நான் பெண்... பெண்புத்தி பேதமை என்பதை, ஆணாகிய நீயும் அறியாததா ! என் காதலரைக் கொன்று விட்டாய் ! பேயனே போ வெளியே !

எல்வீர் — போ இங்கு நிற்காதே ! போ !

(என்று விரட்டிக்கொண்டே ஹாலுக்கு வந்து விடுகின்றனர்)

(வெளியில் அரசரும், தியேக், அரியாஸ் மூவரும் நகரசோதனை செய்துவருகின்றனர்)

அரசர் — இதென்ன இங்கு, நடு நிசியில் இரைச்சல் ?

தோன்தியேக் — இது ஷிமேனின் வீடுதான் வாரும் உள்ளே சென்று பார்ப்போம்.

அரசர் — யார் இது ! தோன்சான்ஷா ? இவ்விருளில் உனக்கு இங்கென்ன வேலை ?

(வீட்டினுள் மூவரும் பிரவேசிப்பதைக் கண்ட ஷிமேன்)

ஷிமேன் — யார் அரசரா ! தந்தையே ! இப்பாவி, என் காதலர் ரொத்ரீகைக் கொன்று விட்டு வந்திருக்கிறான் ! அவர் தூக்கத்திலிருக்கும் சமயம், அவர் வாளுக்கே, அவரை இரையாக்கி விட்டு தன் வீரத்தை காட்ட வந்திருக்கிறான் என்னிடம்.

அரசர் — தோன்சான்ஷ் இது உண்மைதானா !

தோன்சான்ஷ் — அரசே......

ஷிமேன் — (குறுக்கிட்டு) அரசே ! உண்மையில் என் காதலரை இவன் கொலை செய்து விட்டான். இந்நாட்டிற்கே முக்கியமான ஒருவரை அநியாயமாய் மாய்த்துவிட்டான் பாதகன் இதோ பாருங்கள் ரொத்ரீகின் வாள் !

அரசர் — மடையனே ! பதில் சொல் விரைவில் ! என்ன நடந்தது ?

தோன்சான்ஷ் — அரசே ! ஷிமேன் நினைத்தது தவறு ! இந்த வாள்தான், அவளின் உள்ளத்தை மாற்றிவிட்டது ! ஷிமேனே

நான் அடையவேண்டும் என்ற எண்ணத்தால், சற்றுமுன் ரொத்ரீகைச் சந்தித்தேன், அவரிடம் வெட்கமின்றி என் உள்ளத்தைத் திறந்து காட்டினேன்! பரிசாக அவர் தனது உடைவாளை, என்னிடம் தந்து, ஷிமேனை மணந்து கொள்ளுமாறும், அவரைக் கொன்றுபோட்டு விட்டதாகவும் சொல்லச்சொன்னார்.. ...

ஷிமேன் — அப்படியானால் என். காதலர்... உயிருடனிருக்கிறாரா ?

தோன்சான்ஸ் — உயிருடனிருக்கிறார். ஆனால் ஊரில் இல்லை.

தோன்தியேஃ — என்ன ! ரொத்ரீக் எங்கே சென்றுவிட்டான்?

தோன்சான்ஷ் — இனி இந்நாட்டில் இருப்பதில்லையென்று, வெளியேறி விட்டார்.

ஷிமேன் — ஐயோ... தனியாக அவர் எங்கே செல்வார் ! அரசே அவரை நான் தனித்திருக்கவிட முடியாது ! அவர் என் உயிர்; அவரின்றி நான் வாழ முடியாது ! ஆகவே அவரை நானே சென்று தேடி அழைத்து வருகிறேன்... எல்வீர் வா நீயும் என்னுடன்.

அரசர் — நீங்கள் செல்லவேண்டாம்... அரியாஸ்... நீ உடனே சென்று நமதாட்களை பல திசைகளுக்கும் அனுப்பி, ரொத்ரீகை அழைத்துவரச்சொல்... இவ்விரவில் அதிக தூரம் சென்றிருக்க மாட்டான்.

தோன்சான்ஷ் — அரசே ! நானும் சென்று அவ்வெற்றி வீரரை அழைத்து வருகிறேன். இவர்களின் காதலைக்கண்டு அஞ்சுகிறது என் மனம் ! உண்மையில் ஷீமேன் ரொத்ரீகின் அன்பிற்கு மட்டில் தான் உரித்தானவள் ! ..

(சான்ஷேயும், அரியாஸும் வெளிசெல்ல)

அரசர் — வாஸ்தவமே ! தோன்தியேக் அவர்களே ! ஷிமேனின் அன்பைப்பார்த்தீரா ! அவள் ஓர் வீரக் காதலி ! இவளைக் கண்டு, நம் நாட்டுப் பெண்மணிகளும் தலை குனிய வேண்டியதே ! இவளுடைய காதலை தெய்வமும் விரும்பும், இப்படிப்பட்ட ஒரு மருமகள் உமக்கேற்றவளே ! ஆகையினால் விரைவிலே நமதரண்மனையில் "லெ ஸீத் வெற்றி வீரனின்" திருமணத்தை நானே நடத்த உத்தேசித்து விட்டேன் ! ஷிமேன், சரிதானே !

ஷிமேன் — எல்வீர்... அவரை இன்னும் அழைத்து வரவில்லையே... வா... நாமே போய்ப் பார்ப்போம்...

அரசர் — தோன் தியேக் அவர்களே ! இன்றிரவு நாம் நகரசோதனைக்கிளம்பினது ஒரு சுப முடிவைத் தந்துள்ளது அன்றோ ?

காட்சி—27.

[காடு — ரொத்ரீக், யூராக், ஷிமேன், எல்வீர்]

யூராக் — வெற்றி வீரரே சற்று நில்லும் !

ரொத்ரீக் — யார்... அரசகுமாரியா? இந்த அகாலத்தில் இங்கு வரக்காரணம்.

யூராக் — உயிரை உடலுடன் சேர்க்கவே !

ரொத்ரீக் — பிரிந்த உடல் கூடுவதெப்படி !

யூராக் — கால தேவனிடம் நின்று வாதாடி !

ரொத்ரீக் — அது முடியாத காரியமன்ரு ?

யூராக் — மாதர்கள் எங்களால் முடியாததுமுண்டோ !... ரொத்ரீக் அவர்களே, உமது ஷிமேன் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கிருள் !

ரொத்ரீக் — ஆ ! என்ன ! என் காதலிக்கென்ன ?

யூராக் — உயிர் உடலைக் கருதுவானேன் ! இப்போதேனும் உணர்ந்தீரா... (ஷிமேன் வருதைப் பார்த்து விட்டு) அதோ உடலே உயிரை நாடி வருகிறது !

ஷிமேன் — காதலரே ! என்னைப் பிரிந்து செல்லவேண்டாம் ! அபலை என்னை மன்னித்து விடுங்கள். உமது உயிருக்கு அழிவைத் தேடக்கருதிய என்னைச் சிறைப்படுத்தி, ஆயுள் கைதியாக உங்கள் இதயச்சிறையில் அடைத்துவைத்துக் கொள்ளுங்கள்.

(தோன்கொர்மாஸ் இறக்கும் தருணம் கூறியமொழிகள் இருவரின் உள்ளங்களிலும் ஒலிக்கின்றது)

" ரொத்ரீக், ஷிமேன் என் மகள் அவளைக் கைவிடாதே "

ரொத்ரீக் — ஷிமேன் ! நம்மை இணைத்த இறைவன் நமது குற்றங்களை மன்னித் தருள் புரிவார்... எழுந்திரு !

யூராக் — கடமைக்கும், காதலுக்கும் வெற்றி கண்ட வீரக் காதலர்களே ! வாரும் என்னுடன் ! அரண்மனைக்கு !

காட்சி — 28.

[காடு — தோன்சான்ஷ், அலோன்ஜ், அரியாஸ்]

தோன்சான்ஷ் தனிமையில் செல்ல (மானமெல்லாம் போன பின்னே என்ற பாட்டு இசைக்கிறது)

அலோன்ஜ் — என்னடா சான்ஷ், ரொத்ரீகை அழைத்து வருவதாக அரசரிடம், சொல்லிவிட்டு வந்தாயமே... இப்போது இக் கானகத்தில் என்ன ஆண்டி நடைப்போடுகிருய் !

தோன்சான்ஷ் — காதல் போரில் தோல்வியைக் கண்டவன், ஆண்டியாகத்தானே ஆகவேண்டும் !

அலோன்ஜ் — எங்கே அப்பனே அமைக்கப்போகிறாய் உன் ஆசிரமத்தை ?

அரியாஸ் — ஏண்டா நீயும் அவனது சிஷ்யனாகப் போகிறாயா !

தோன்சான்ஷ் — நண்பர்களே உங்களது பரிகாசத்திற்கு ஆளானவன்தான் நான் கல்வி அறிவுடன் உடல்திறனும் இருந்தும் காமத்தால் மதியிழந்தேன், வீரமும் இழந்து தலை குனிந்தேன் இன்று

அரியாஸ் — உள்ளம் உடைந்த, உண்மைக் காதலர்களின் இணைப்புக்கு நீ கடவுளின் ஒரு கருவியாக இருந்திருக்கும்போது, உன்னை நீயே தாழ்த்திக் கொள்வது கூடுமா !

தோன்சான்ஷ் — பூதலம் போற்றும் ஷிமேனின் முன் நான் தலைகுனிந்து நிற்கவேண்டியவனே தான்,

அலோன்ஜ் — இல்லை ! அரியாஸ் சொனனதுபோல் உன்னால் அன்றோ இன்று ஷிமேனுக்கும் வெற்றிவீரர் ரொத்ரீகிற்கும் எல்லாம் சுபமாக முடிந்தது ! இப்போது அரண்மனையில் நடக்கும் மங்கள விழாவிற்கு நீயும் வந்துதான் ஆகவேண்டும். நீ வரா விட்டால் உன்பழிப்பு அதிகமாகும்...

அரியாஸ் — ஆமாம் ! தோன்சான்ஷ் ஆமாம்... வா எங்களுடன் கடமையிலும், காதலிலும் வெற்றிகண்ட வீரக்காதலர்களைக் கண்டு களித்து மகிழலாம் வா !

அலோன்ஜ் — அவர்களின் திருமண விழாவைச் சிறப்பிக்க அரசர் அருமையான நடன விருந்தும் வைத்திருக்கிறாராம். கண்டு களிப்போம் எல்லோரும்.

(பாண்டு வாத்தியங்கள் முழக்கம் கேட்கிறது)

காட்சி — 29

மணமக்கள் கெம்பீரமாக வீற்றிருக்கின்றனர். அரசர் முன்னிலையில் மக்கள் ஆரவாரம் செய்கின்றனர்.

பிரதானிகள் — வாழ்க — லெ ஸீத் வாழ்க !

படைவீரர்கள், பிரஜைகள் — வீரக் காதலி ஷிமேனும் வாழ்க!

(நடனம் நடக்கிறது)

மங்கள கீதம் முழங்குகின்றது

திரை

வெற்றி வீரர் லெ ஸீத் வாழ்க - வாழ்க

பிரபல பிரஞ்சு எழுத்தாளர் "கொர்னேய்" அவர்களின் "லெஸீத்" என்ற காவியத்தின் தமிழ் வடிவம் கீழ்க்கண்ட இடங்களில் 25 தடவை நடைபெற்றன.

1) 11—11—43 காரைக்கால் அருள் தியேட்டரில் செஞ்சிலுவை நிதிக்காக அரங்கேற்றப்பட்டது.

2) 8—1—49 காரைக்காலில் இராணுவபோலீஸ சகாய நிதிக்காக

3) 13—10—50 புதுவை கெப்ளே தியேட்டரில் Mutuelle Militaire நிதிக்காக.

4) 20—10—50 புதுவையில் மறுமுறையாக, கவர்னர் ஆந்ரேமெனூர் தலைமையில்

5) 7—11—58 } புதுவை நியூட்டோன் திரை அரங்கில் Fine Arts Society நிதிக்காக
6) 8—11—58 " " " "

7) 1—1—59 } தும்கூர் என்ற ஊரில் } இரண்டு நாட்கள்.
8) 2—1—59 " " "

9) 15—1—59 சென்னை பார்க்பேர் & கண்காட்சியில்

10) 20—2—59 புதுவை நியூட்டோன் தியேட்டரில் திரு. சக்கர வர்த்தி அய்யங்கார் தலைமையில்

11) 21—2—59 பிரஞ்சு கோன்சுய்ல் திரு. மோரேல் பிராங்கோன்ஜ் தலைமையில்.

12) 11—11—59 }
13) 12—11—59 } பெங்களூர் டவுன் ஹாலில் மூன்று நாட்கள்
14) 13—11—59 }

15) 9—12—59 சென்னை பாரதிக் கல்வி சங்க நிதிக்காக.

16) 6—5—60 மதுரை மகாசபை — சித்திரை பொருட்காட்சியில்

17) 19—2—62 புதுவை முனிசிபல் ஐந்தாண்டு திட்டகண்காட்சியில்

18) 8—3—63 புதுவை ஒதியன்சாலை முனிசிபால் தியேட்டரில் வாழைக்குளம் ஸ்ரீ குபேர் இரவு பாடசாலை கட்டிட நிதிக்காக.

19) 30—11—63 புதுவை முனிசிபல் தியேட்டரில் பிரஞ்சு இந்திய கலாச்சார கழக நிதிக்காக புதுவை கவர்னர் சீலம் மேயர் குபேர் தலைமையில்

20) 9—8—65 சென்னை கிருஷ்ண கான சபாவில்

21) 5—12—65 காரைக்கால் ஜோதி டாக்கீஸில் "பாரீஸில் இயங்கிவரும் A. F. I." கட்டிட நிதிக்காக.

22) 30—1—66 சென்னை பெரம்பூர் நியூ ஹாலில் எஸ். எப். மேரி தனியார் பாடசாலை வளர்ச்சி நிதிக்காக.

23) 19—3—73 புதுவை முன்சிபல் கலை அரங்கில் M. M. R. சங்க நிதிக்காக.

24) 20—8—78 புதுவை கம்பன் கலையரங்கில் பிரஞ்சு கோன்ஸிஸ் ழோர்ழ சொக்கிஸீ யோலி தலைமையில் "பிரஞ்சு மொழி கலாச்சார நண்பர்களின்" சங்க நிதிக்காக.

25) 26—12—83 வெள்ளிவிழா காட்சியாக, புதுவை கம்பன் கலை அரங்கில் "சொசியெத்தே புரோகிரேசீஸ்த்" பள்ளியின் வளர்ச்சி நிதிக்காக நடைபெறுகிறது.

குறிப்பு :— புதுவை வானொலி நிலையத்தில் முழு நேர நாடகமாக "Le Cid, லெஸீத்" இரண்டு தடவை, ஒலிப்பரப்பப் பட்டது.

